Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, FEBRUARY 14, 2025

வெள்ளிக்கிழமை 14, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர்: 159 | பக்கம்:09 | நகரப்பதிப்பு | FREE



## நவம் மகா பெரஹெரா...

கொழும்பு–02 ஹுணுப்பிட்டிய கங்காராமய விகாரையின் வருடாந்த நவம் மகா பெரஹெராவின் இறுதி நாள் நிகழ்வு புதன்கிழமை (12) நடைபெற்றதுடன், புத்த சாசன மற்றும் கலாசார விவகார அமைச்சர் சுனில் செனவி புனித கலசத்தை யானை மீது வைத்து பெரஹெராவை ஆரம்பித்து வைத்துள்ளார்.



## அழகான உலகத்தை உருவாக்கிட ஒன்று சேர்வோம்

மனித வரலாற்றின் தீர்மானகரமான திருப்புமுனையில் இருந்துகொண்டு முன்னொருபோதும் இருந்திராத உலகளாவிய ஒத்துழைப்பினை வேண்டிநிற்கின்ற தருணத்தில் நடாத்தப்படுகின்ற தனித்துவமான மாநாட்டில் உரை நிகழ்த்தக் கிடைத்தமை மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

முழுச் செய்தி P5




உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டமூலம் தொடர்பில்

# இன்று விசேட பாராளுமன்ற அமர்வு

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான தீர்மானத்தை சபாநாயகர் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கும் நோக்கில் இன்று வெள்ளிக்கிழமை (14) காலை 9.30 மணிக்கு பாராளுமன்றத்தின் விசேட கூட்டத்தைக் கூட்டுவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக பாராளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## காதலர் தினத்தன்று பெற்றோர்களுக்கு அறிவுறுத்தல்

உலகம் முழுவதும் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி காதலர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

இந்த தினத்தை வர்த்தகர்களும் போதைப்பொருள் கடத்தல்காரர்களும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர்.

தொடர்ச்சி P2

## நாமலின் வழக்கு தொடர்பில் சிஐடி முன்னெடுக்கும் நடவடிக்கை



இலங்கை பொதுஜன பெரமுன (SLPP) பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட சந்தேக நபர்கள் குழுவிற்கு எதிராக பணமோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளதாக குற்றப் புலனாய்வுத் துறை (CID) இன்று வியாழக்கிழமை (13) கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்குத் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## மஹிந்தவின் இல்லத்தில் நீர் வெட்டு



நீர் வெட்டு

விஜேராமவில் பகுதியில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தின் ஒரு பகுதியில் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2




இலங்கைக்கும் UAEக்கும் இடையில்

## ஒப்பந்தம் கைச்சாத்து

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இலங்கைக்கு இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பொருளாதார, முதலீட்டுத் தொடர்புகளைப் பலப்படுத்துவதற்காகவே குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

உலக அரச உச்சி மாநாட்டையொட்டி அநுரகுமார திசாநாயக்க ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு மேற்கொண்டிருந்த மூன்று நாள் விஜயத்துடன் இணைந்ததாக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## தையிட்டி தொடர்பில் பௌத்தசாசன விளக்கம்

யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரை தொடர்பில் இராணுவத்தினருடனும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடனும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாக பௌத்தசாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

ஊடகவியலாளர் லசந்த கொலை வழக்கு;

## 3 பேரின் விடுதலைக்கான பரிந்துரை தற்காலிகமாக இரத்து



இலங்கை ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்களின் விடுதலை தொடர்பாக வழங்கப்பட்ட முந்தைய உத்தரவை இடைநிறுத்துமாறு சட்டமா அதிபர் கல்கிசை நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## சிக்கலில் அர்ச்சுனா எம்.பி.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

சட்டமா அதிபரை பதவி நீக்கம் செய்ய முயற்சி;

## சட்ட அதிகாரிகள் சங்கம் எதிர்ப்பு

சட்ட மா அதிபரை அந்த பதவியிலிருந்து நீக்குவதற்காக முன்னெடுக்கப்படும் எந்தவொரு செயற்பாட்டுக்கு எதிராகவும், சட்ட மா அதிபரைப் பாதுகாப்பதற்காகவும் முன்னிற்பதாக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சட்ட அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## ஏப்ரல் நடுப்பகுதி வரை வெப்பம்

நாட்டில் தற்போது நிலவும் வெப்பமான காலநிலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதி வரை தொடரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

தொடர்ச்சி P2

## டான் ப்ரியசாத் பிணையில் விடுதலை



சமூக செயற்பாட்டாளர் டான் ப்ரியசாத் என அழைக்கப்படும் அபேரத்ன லியனகே சுரேஷ் ப்ரியசாத் என்பவரை பிணையில் விடுவிக்குமாறு கோரி கொழும்பு நீதவான் நீதிமன்றம் வியாழக்கிழமை (13) உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டில் போதைப்பொருள் வர்த்தகர்

தொடர்ச்சி P2

நாட்டை விட்டு

## வெளியேறவுள்ள 5,000 வைத்தியர்கள்

மொத்தம் 2,000 வைத்தியர்கள் ஏற்கெனவே சுகாதார சேவைகளை விட்டு வெளியேறிவிட்டதுடன், மேலும் 5,000 பேர் நாட்டை விட்டு வெளியேற உள்ளனர் என்று அரசு வைத்திய அதிகாரிகள் சங்கம் (GMOA) தெரிவித்துள்ளது. மருந்து விநியோகஸ்தர்கள் பற்றாக்குறையால் பல சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்று GMOAவின் வைத்தியர் சமில் விஜேசிறி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நாமலின் வழக்கு தொடர்பில் சிஐடி முன்னெடுக்கும் நடவடிக்கை

நாமல் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியபோது, சட்டவிரோதமான முறையில் சம்பாதித்ததாகக் கூறப்படும் 15 மில்லியன் ரூபாய் தொகையை என்.ஆர். கன்சல்டன்சி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் (NR Consultancy (Pvt) Ltd) நிறுவனத்தில் முதலீடு செய்து பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்கு இன்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

விசாரணையின் போது, நாமல் ராஜபக்ஷ மற்றும் பிற சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பான விசாரணைகள் முடிந்து விட்டதாகவும், வழக்குன் குற்றச்சாற்றை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் சி.டி.ஐ. அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், வழக்கு தொடர்பான சட்டமா அதிபரின் ஆலோசனை இன்னும் கிடைக்கவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதன்படி, வழக்கை ஆகஸ்ட் 07ஆம் திகதி மீண்டும் விசாரிக்க உத்தரவிட்ட நீதிபதி, அன்றைய தினம் சட்டமா அதிபரின் ஆலோசனையை நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு முதலில் 'நல்லாட்சி' அரசாங்கத்தின் போது, நித்ய சேனானி சமரநாயக்க, சுஜானி போகல்லாகம மற்றும் என். ஆர் கன்சல்டன்சி (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்களாகப் பணியாற்றிய சுதர்ஷன கணேகொட ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த மகனான பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ , பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியபோது சட்டவிரோதமாகப் பெறப்பட்டதாகக் கூறப்படும் 15 மில்லியனை ரூபாய் நிறுவனத்தில் முதலீடு செய்ததாகவும் இந்த வழக்கு குற்றம் சாட்டியுள்ளது.

# தையிட்டி தொடர்பில் பௌத்தசாசன விளக்கம்

இந்த விடயம் தேசிய ஐக்கியம் தொடர்பில் உணர்வுபூர்வமானதாக காணப்படுவதை கருத்தில் கொண்டு, இது தொடர்பில் காணப்படும் குழப்பங்களிற்கு தீர்வை காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக பௌத்தசாசன அமைச்சின் செயலாளர் ஏ.எம். பி.எம்.பி.அத்தப்பத்து குறிப்பிட்டுள்ளார்.

இராணுவம் தற்போது அந்த ஆலயத்தை நிர்வகித்துவந்தாலும் அரசாங்கம் பௌத்தவிவகாரங்களிற்கான ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இந்த விகாரையை பதிவு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, இராணுவம் தற்போது ஆலயத்தை நிர்வகிக்கின்றதுடன், தற்போது அங்கு கட்டுமானப் பணிகள் இடம்பெறுகின்றன. அதில் பௌத்த மதகுரு ஒருவர் அங்கு தங்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு தன்னால் அதனை தொடர்ந்து நிர்வகிக்க முடியாது பௌத்த விவகாரங்களுக்கான ஆணையாளர் அலுவலகத்தின் கீழ் இந்த விகாரையை பதிவு செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன், இந்த பெயரில் விகாரை ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அங்கு நிலம் மட்டுமே உள்ளது.

மேலும் இராணுவத்தினரும் கடற்படையினரும் இரண்டு பௌத்த ஆலயங்களை நிர்வகிக்கின்றனர். இது குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது,

இராணுவத்தினால் அதனை நிர்வகிக்க முடியாவிட்டால் அதற்கு தீர்வை காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பௌத்தசாசன அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி.அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

# சிக்கலில் அர்ச்சுனா எம்.பி.

நபர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் இந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், பாராளுமன்ற உறுப்பினராக இருப்பது, இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எந்த சிறப்புச் சலுகைகளையோ அல்லது சட்டத்திலிருந்து விலக்குகளையோ வழங்காது.

உயர்ந்த சபையின் உள்ள அவரது நடத்தை மிகவும் மரியாதைக்குரியதாக இருக்க வேண்டும். பொதுமக்களின் எதிர்பார்ப்பும் அதுதான்

இருப்பினும், அவர் சட்டத்திற்கு எதிராக செயல்பட்டால், நாங்கள் சட்டத்தின்படி செயல்படுவோம்.

எதிர்காலத்தில் நாம் பார்ப்பது போல, அந்த சம்பவம் தொடர்பாக இலங்கை பொலிஸார் தற்போதுள்ள சட்டத்தின்படி செயல்படுவார்கள்" என குறிப்பிட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை (11) அன்று யாழில் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா இருவரைத் தாக்கும் வகையிலான சிசிரிவி காணொளி ஒன்று வெளியாகியிருந்தது.

இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகிய நபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியானது

> **துரத்தித் துரத்தி தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பான சி.சி.ரி.வி. காணொளியும் வெளியானது. எனினும், குறித்த நபர் தன்னைத் தாக்கியதாகத் தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது**

இந்நிலையில், யாழில் நேற்று முன்தினம் இரவு, தனியார் விருந்தினர் விடுதி ஒன்றுக்குள் வைத்து அர்ச்சுனா எம்.பி காணொளி எடுக்க முற்பட்ட போது, அங்கு நின்ற நபருக்கும் அவருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர், குறித்த நபரை விடுதிக்குள் வைத்துத் துரத்தித் துரத்தி தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பான சி.சி.ரி.வி. காணொளியும் வெளியானது.

எனினும், குறித்த நபர் தன்னைத் தாக்கியதாகத் தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த விடயம் குறித்து பொலிஸார், அர்ச்சுனாவின் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்று விசேட பாராளுமன்ற அமர்வு

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியின் தலைமையில் 10ஆம் திகதி கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 16இன் விதிகளின்படி, பிரதமர் சபாநாயகரிடம் விடுத்த கோரிக்கையின் பேரில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வெள்ளிக்கிழமை (14) இந்தச் சட்டமூலத்தை ஆராய்வதற்காகச் சம்பந்தப்பட்ட அமைச்சு சார் ஆலோசனைக் குழுவைக் கூட்டுவதற்கும் இங்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை எதிர்வரும் 17ஆம் திகதி பி.ப. 2.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை நடத்துவதற்கும் இங்குத் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் திருத்தங்களை முன்வைப்பதாயின் அவற்றைப் பெப்ரவரி 17ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் வழங்குவதற்கும் இங்கு இணங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்ட அதிகாரிகள் சங்கம் எதிர்ப்பு

அந்த சங்கம் வியாழக்கிழமை (13) விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் தொடர்பில் கடந்த நாட்களில் வெளியிடப்படும் தவறான கருத்துக்கள் தொடர்பில் தங்களது சங்கம் கவலையடைவதாகவும் அந்த சங்கத்தின் பதில் செயலாளர் டஸ்யா கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், வழக்கொன்றுடன் தொடர்புடைய 3 சந்தேகநபர்களை விடுவிப்பதற்காக சட்ட மா அதிபரினால் அண்மையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள், சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மரபுகளுக்கு அமைய இடம்பெற்றதாகவும் டஸ்யா கஜநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

எனவே, குறித்த தீர்மானம் தொடர்பில் தங்களது சங்கம் முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சட்ட அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, சட்ட மா அதிபரைப் பதவியிலிருந்து நீக்கும் எந்தவொரு முயற்சியையும் தங்களது சங்கம் எதிர்க்கும் என சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சட்ட அதிகாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## டான் ப்ரியசாத் பிணையில் விடுதலை

ஒருவரை கைது செய்ய வேண்டாம் என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவருக்கு தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் டான் ப்ரியசாத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு தொடர்பில் டான் ப்ரியசாத்துக்கு எதிராக நீதிமன்றத்தினால் வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டதுடன், அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், டான் ப்ரியசாத் கடந்த 11ஆம் திகதி துபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகைத் தந்திருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஏப்ரல் நடுப்பகுதி வரை வெப்பம்

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க கூறியுள்ளதாவது,

தற்போது அதிகாலை வேளையில் நிலவும் குளிரான காலநிலையும் தொடரக்கூடும்.

அத்துடன், நாட்டின் சில பகுதிகளில் இடைக்கிடையே சிறியளவில் மழை வீழ்ச்சி பதிவாகினாலும், வெப்பமான காலநிலை தொடரும்.

மழை பெய்வதற்கு ஏற்ற அளவிலான திறன் கொண்ட மேகங்களின் உருவாக்கம் குறைவாகக் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# ஒப்பந்தம் கைச்சாத்து

இந்த ஒப்பந்தத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் நிதி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மொஹமட் பின் ஹாட் அல் ஹூசெதி மற்றும் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இந்த இருதரப்பு ஒப்பந்தம், உலக சந்தைகளில் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்தவும், வெளிநாடுகளில் முதலீடுகளைப் பாதுகாப்பாக மேற்கொள்வதற்கும் சட்ட வரைவொன்றை வழங்கும்.

முதலீட்டாளர் உரிமைகளைப் பாதுகாக்கவும், பொருளாதார ஒத்துழைப்புக்களை மேம்படுத்தவும் விரிவான முதலீட்டு பாதுகாப்பு, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நெறிமுறை மற்றும் கொள்கை வரைவு தயாரிப்பாளர்கள் தொடர்பில் இருநாடுகளுக்கும் இடையில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான வசதிகளை வழங்குதல் என்பன இந்த ஒப்பந்தத்தின் நோக்கங்களாகும்.

இந்த ஒப்பந்தம் உலக பொருளாதார கூட்டிணைவை வலுப்படுத்தும் அதேவேளை இலங்கைக்கான முதலீட்டு வாய்ப்புகளைத் தேடுவதற்கான வசதிகளையும் வழங்கும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்குள் வர்த்தக மற்றும் வணிக வேலைத்திட்டங்களை வலுப்படுத்துவதுடன் வெளிப்படைத்தன்மையான மற்றும் நிலையான முதலீட்டுச் சூழலை உருவாக்கவும் இதனூடாக எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) ஊக்குவிப்பதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பையும் இந்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது.

அதேபோல் இந்த ஒப்பந்தம் புதிய முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மேம்படுத்தவும் அதனால் பொருளாதார முன்னேற்றத்துக்கும், புதிய வணிக வாய்ப்புக்களை உருவாக்கவும் வழிவகுக்கும்.

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இலங்கைக்கு இடையிலான நீண்டகால தொடர்புகளை வலுப்படுத்தி நிலையான முதலீடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் இருநாடுகளுக்கும் இடையில் வர்த்தக மற்றும் நிதி தொடர்புகளை மேம்படுத்தவும் வழிவகுப்பதாக இது அமையும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெளியேறவுள்ள 5,000 வைத்தியர்கள்

இந்த வைத்தியர்கள் வெளிநாட்டில் பணிபுரிய தேவையான அனைத்து தகுதிகளையும் ஏற்கனவே பூர்த்தி செய்துவிட்டதாக அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில், நாட்டில் உள்ள மருத்துவ ஊழியர்கள் பாதுகாக்கப்பட வேண்டும், பொருளாதாரம் நிலையானதாக இருக்க வேண்டும், அரசாங்கம் குறுகிய கால தீர்வுகளை செயல்படுத்த வேண்டும் என்றும், வரவு செலவுத் திட்டம் தேவையான மாற்றத்தை ஏற்படுத்தும் என்று தான் நம்புவதாகவும் விஜேசிறி தெரிவித்துள்ளார்.

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி

# திட்டத்தை கைவிட அதானி தீர்மானம்

இந்திய அதானி நிறுவனம் இலங்கையில் மன்னார் பிரதேசத்தில் நிர்மாணிக்க திட்டமிட்டிருந்த 1 பில்லியன் டொலர் முதலீட்டுடனான காற்றாலை மின்சார உற்பத்தி திட்டத்திலிருந்து விலகி கொள்வதற்கு தீர்மானித்துள்ளது.

மேற்படி, திட்டத்தை கைவிடுவதாக அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் அறிவித்துள்ளதுடன், அந்த நிறுவனத்தின் செயலாளர் இலங்கை முதலீட்டு சபைக்கு அது தொடர்பில் கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.



இலங்கையில் மன்னார் மற்றும் பூநகரி பகுதிகளில் 484 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் புதுப்பிக்கத்தக்க காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தினை அமைப்பதற்கு அந்த நிறுவனம் திட்டமிட்டிருந்தது.

அத்துடன், அதன் சேவையை தென்னிலங்கைக்கு விஸ்தரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், மேலும் 2 மின்சார மையங்களை உருவாக்குவதற்குமான வேலைத் திட்டமும் அதானி நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்படவிருந்தது.

அது தொடர்பாக அதானி நிறுவனம் இலங்கையில் அரச உயர் அதிகாரிகளுடன் 14 சுற்று பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளதாகவும், அந்த நிறுவனம் இலங்கை முதலீட்டு சபைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

# காதலர் தினத்தன்று பெற்றோர்களுக்கு அறிவுறுத்தல்

அதன்படி, இன்று 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடவுள்ள காதலர் தினத்தில் பல்வேறு குற்றச் செயல்கள் குறித்து மிகவும் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

காதலர் தினத்தன்று இளைஞர், யுவதிகளை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுதல், சமூக ஊடகங்களை தவறாக பயன்படுத்துதல், மோசடிகளில் ஈடுபடுதல், பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் நடவடிக்கைகள் குறித்து மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

காதலர் தினத்தன்று இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்களிலிருந்து இளைஞர்களும் யுவதிகளும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

இவ்வாறான குற்றச் செயல்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்தால் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கவும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மஹிந்தவின் இல்லத்தில்...

குறித்த வீட்டின் ஒரு பகுதியில் பாதுகாப்புப் படையினர் தங்கியிருந்த்தாக வுறப்படுகின்றது.

நிலுவையில் உள்ள சுமார் 300,000 ரூபாய் கட்டணங்களை செலுத்தாததால் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ள பாதுகாப்புப் படையினர் தங்கியுள்ள வீட்டிற்கான நீர் கட்டணம் ஜனாதிபதி செயலகம் மூலமாக செலுத்தப்படுவதாக சட்டத்தரணி மனோஜ் கமகே மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், சம்பந்தப்பட்ட நீர் கட்டணங்கள் சில மாதங்களுக்கு முன்பு செலுத்தப்பட்டவை என்று கூறிய முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர், அந்த நேரத்தில் அவ்வீட்டில் 160 பாதுகாப்புக் காவலர்கள் இருந்ததால், இவ்வளவு நீர் கட்டணத்தைப் பெறுவது நியாயமானது என தெரிவித்துள்ளார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தங்கியுள்ள பகுதிக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## 3 பேரின் விடுதலைக்கான பரிந்துரை தற்காலிகமாக இரத்து

சந்தேக நபர்களை விடுவிப்பதற்கான தனது முந்தைய உத்தரவு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் கல்கிசை நீதவான் நீதிமன்றத்திற்கு எழுத்துப்பூர்வமாக அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனவரி 27 அன்று, சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்க, குற்றப் புலனாய்வுத் திணைக்கள (CID) தலைவருகு, குறித்த வழக்கில் மூன்று முக்கிய சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் தொடரப்படாது என்று தெரிவித்தார்.

அந்தக் கடிதத்தின்படி, முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரி பிரேம் ஆனந்த உடலகம, முன்னாள் கல்கிஸ்ஸை குற்றப்பிரிவுப் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ்.ஐ. திஸ்ஸசிறி சுகதபால மற்றும் முன்னாள் டி.ஐ.ஜி. பிரசன்ன நாணயக்கார ஆகியோர் விடுவிக்கப்படக்கூடிய சூழல் இருந்தது.

சட்டமா அதிபரின் பரிந்துரை மீதான விமர்சனங்களுக்கு பதிலளித்த அரசாங்கம், இந்த விஷயத்தை ஆராய்ந்து பரிந்துரையை ஆய்வு செய்வதாகக் கூறியது.

அதையடுத்து, பிரதமர் ஹரிணி அமரசூரியவும், கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் குடும்பத்திற்கு நீதியைப் பெற்றுத் தருவதில் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளதாக பாராளுமன்றத்தில் உறுதியளித்தார்.

மறைந்த பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்ரமதுங்க, சட்டமா அதிபர் பரிந்த ரணசிங்கவை பதவி நீக்கம் செய்யுமாறு பிரதமரை வலியுறுத்தி எழுதிய கடிதத்தை அடுத்தே பிரதமர் இவ்வாறு கூறினார்.

# “முக்கிய அரசியல் கட்சிகள் இணைந்து மகஜர் கையளித்துள்ளனர்”

அஸ்லம் எஸ்.மௌலானா

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பு மனுக்களுக்கான திகதி அறிவிப்பதற்கு முன்பு தேர்தல் ஆணைக்குழுவானது சகல அரசியல் கட்சி செயலாளர்களையும் சந்திக்க வேண்டும் என்று சில முக்கிய அரசியல் கட்சிகள் இணைந்து கோரிக்கை விடுத்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மகஜர் ஒன்று தேர்தல் ஆணையாளர் சமன் சிறி ரத்நாயக்கவிடம் வியாழக்கிழமை (13) கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி., சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் எம்.பி, மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி. உள்ளிட்டோர் தேர்தல் செயலகத்திற்கு நேரடியாகச் சென்று குறித்த மகஜரை கையளித்துள்ளனர்.

மகஜரை பெற்றுக் கொண்ட தேர்தல் ஆணையாளர், குறித்த கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலிப்பதாக உறுதியளித்துள்ளார் என்றும் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.






# சிங்கக் குட்டிகளுக்கு பெயர் சூட்டும் விழா

அம்பலாந்தோட்டை - ரிதியகம ஸஃபாரி பூங்காவில் பிறந்து மூன்று மாத காலமாகிய ஆறு சிங்கக் குட்டிகளுக்குப் பெயரிடும் விழா புதன்கிழமை (12) நடைபெற்றுள்ளது.

ஆறு சிங்கக் குட்டிகளுக்காக 4000 பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டதுடன் அதில் தெரிவு செய்யப்பட்ட ஆறு பெயர்கள் சூட்டும் நிகழ்வு மிருகக் காட்சி சாலை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர்.சி.ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றுள்ளது.

அதன்படி ஆண் சிங்கத்திற்கு மேக்கா என்றும், பெண் சிங்கங்கள் ஐந்திற்கும் தாரா, ஆக்ரா, பூமி, அகீரா மற்றும் எல்சா எனும் பெயர்களை வைப்பதற்கு மிருகக்காட்சிச் சாலை திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.



அந்தப் பெயர்களைப் பரிந்துரை செய்த மூன்று பேர் இந்நிகழ்வில் கலந்துகொண்டதுடன், அவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.



# பொலிஸ் உத்தியோகத்தர் மீது கூறிய ஆயுதத்தால் தாக்குதல்


கொழும்பு 02, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதியில் , வியாழக்கிழமை (13) அதிகாலை 2.45 மணியளவில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து சென்ற ஒருவரைச் சோதனை செய்ய முயன்ற கொள்ளுப்பிட்டிய பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் ஒருவரை, சந்தேக நபர் கூரிய ஆயுதத்தால் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக கொம்பனி வீதி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த கான்ஸ்டபிள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த கான்ஸ்டபிள் தனது கடமையை முடித்து விட்டு வீடு திரும்பும் போது, சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து சென்ற ஒருவரைப் பார்த்துச் சந்தேகப்பட்டு அவரைப் பின் தொடர்ந்த நிலையில், ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதியில் வைத்து சந்தேக நபரைப் பிடித்து, தான் ஒரு பொலிஸ் அதிகாரி என கூறி, அவரை விசாரிக்க முயன்றபோது, கூரிய ஆயுதத்தால் தாக்கி விட்டு சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற சிசிடிவி காட்சிகளுக்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காதலிகளின் கவனத்திற்கு



இன்றைய தினம் கொண்டாடப்படும் காதலர் தினம் தொடர்பில் பொலிஸார் அறிக்கை ஒன்றைவெளியிட்டுள்ளனர்.

அதன்படி, தமது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, “காதலர் தினத்திற்கு முன்பு நீங்கள் ஒரு பெண்ணாக இருந்தால், காதலர் தினத்தைக் கொண்டாடப் பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்வதற்கு முன்பு உங்கள் பெற்றோர் உங்களுக்குக் கொடுத்த விலைமதிப்பற்ற வாழ்க்கையைப் பற்றி இருமுறை சிந்தியுங்கள்" என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்கள் தங்களுக்கு எதிராக ஏதேனும் வன்முறை நடந்தால் 109 என்ற அவசர எண்ணை அழைக்க வேண்டும் என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பத்திரகாளி அம்மன் ஆலய பாற்குடபவனி

வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் தேற்றாத்தீவு ஸ்ரீ வட பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் பாற்குடபவனி வெகு விமர்சையாக வியாழக்கிழமை(13) இடம்பெற்றது.

தேற்றாத்தீவு கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து நடைபவனியாக மேளதாளங்கள் முழங்க, நாதஸ்வரங்கள் ஒலிக்க, பக்தர்களின் அரோகரா கோசங்களிட்டு, பாற்குடப் பவனி ஆரம்பமாகியது.


தொடர்ந்து தேற்றாத்தீவு ஸ்ரீ வட பத்திரகாளி அம்மன் ஆலயத்தைச் சென்றடைந்தும்,





அங்கு அம்பாளுக்குப் பாலாபிஷேகம் இடம்பெற்றது. இதன்போது அப்பகுதியைச் சேர்ந்த பல நூலிற்குக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# இஞ்சி மூட்டைகளுடன் மூவர் கைது



ரஸீன் ரஸ்மின்

புத்தளம், கற்பிட்டி - தளுவ பிரதேசத்தில் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகை காய்ந்த இஞ்சி மூட்டைகளுடன் சந்தேக நபர்கள் மூவர் செவ்வாய்க்கிழமை (11) அன்று கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளைக்குச் சொந்தமான புத்தளம் - தம்பபன்னி நிறுவன கடற்படையினர் கற்பிட்டி - தளுவ பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (11) இரவு விசேட சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட போது, சந்தேகத்திற்கிடமான கெப் வண்டி ஒன்றைச் சோதனையிட்ட நிலையில் 32 பொதிகளில் அடைக்கப்பட்ட நிலையில் 1158 கிலோ 60 கிராம் உலர்ந்த இஞ்சியும், 45 கிலோ கிராம் கருவாடும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் புத்தளம் மற்றும் மணல் தோட்டம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட உலர்ந்த இஞ்சி, உலர்ந்த கருவாடு மற்றும் கெப் வண்டி என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் கைது

ராகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பத்கம்முல்ல பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவன் புதன்கிழமை (12) கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ராகம பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து, 1 கிலோ 56 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.



இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# குளிர்பானம் அருந்திய தந்தை, மகள் வைத்தியசாலையில்

பலாங்கொடை -கிரிதிகல பகுதியில் உள்ள உணவகமொன்றில் விற்பனை செய்யப்பட்ட குளிர்பானத்தை அருந்திய தந்தை மற்றும் மகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் புதன்கிழமை (12) மாலை இடம்பெற்றுள்ளது.


இரத்தினபுரியை சேர்ந்த 40 வயதான ஒருவர் மற்றும் 9 வயதுடைய சிறுமியே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பானத்தை அருந்தியதையடுத்து அவர்கள் இருவருக்கும் ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக அவர்கள் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்க அச்சகத்தில் பதற்றம்

பாதுகாப்பு அதிகாரி ஒருவருக்கும் பல ஊழியர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து, அரசு அச்சுத் திணைக்களத்தில் பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊழியர்கள் உணவகத்தில் சாப்பிட மறுத்ததால், வெளியிலிருந்து உணவு வாங்க வளாகத்தை விட்டு வெளியேறப் பாதுகாப்பு அதிகாரி அனுமதி மறுத்ததாகக் கூறப்படுகிறது. இதையடுத்து வாக்குவாதம் தொடங்கியது. தகராறின் போது, பாதுகாப்பு அதிகாரி காவலர் அறையிலிருந்து ஒரு கத்தியை எடுத்து ஊழியர்களையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் மிரட்டியதாகக் கூறப்படுகிறது.



இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரி பொரளை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தார்.

**வாடகைக்கு**

800 சதுர அடி பரப்பளவில் டைல்ஸ் பதிக்கப்பட்டு, A/C பொருத்தப்பட்ட வீடு ஒன்று, மின்சாரம், தண்ணீர் வசதி, ஆடம்பர குளியலறை, கழிப்பறை, பேண்ட்ரி சமையலறை, ஒரு படுக்கையறை மற்றும் முழு தளபாடங்களுடன் கட்டுநாயக்க பேஸ்லைன் வீதியில் வாடகைக்கு உள்ளது. மாதம் 45, 000 ரூபாய், நான்கு மாத முன்பணம் தேவை.

கட்டநாயக்க இலவச வர்த்தக வலயத்திற்கு மற்றும் கொழும்பு - கட்டுநாயக்க நெடுஞ்சாலை வெளியேற்றத்திற்கு 1 கி.மீ தூரம். விமான நிலையத்தில் இருந்து புறப்படும் நுழைவாயிலுக்கு 1.5 கி.மீ தூரம்.

விமான நிறுவனம் அல்லது விமான நிலைய ஊழியர்கள் மற்றும் இலவச வர்த்தக வலய நிர்வாக ஊழியர்களுக்கு ஏற்றது. ஒருவர் அல்லது இருவர் தங்கலாம். தனியுரிமையுடன் கூடிய முழுமையாகப் பாதுகாப்பான இடமாகும்.
தொடர்பு கொள்ள : 0770464666

# பெரும் வர்த்தகமாக மாறிவிட்டது காதலர் தினம்

ஒவ்வொரு ஆண்டும், பெப்ரவரி 14ஆம் திகதி காதலர் தினம் கொண்டாடப்படுகின்றது.

கி.பி. 279இல் ரோமை ஆண்டு இரண்டாம் கிளாடியஸ் பேரரசரின் ஆட்சிக் காலத்தில், பல இளைஞர்கள் படையில் சேர்ந்து போரில் ஈடுபட தயங்கினர். இதற்கு முக்கிய காரணம், இளைஞர்கள் திருமணம் செய்து கொள்ளும்போது, மனைவிகள் தங்கள் கணவர்கள் போர்க்களத்தில் இறந்தால் விதவைகளாகி விடுவார்கள் என்ற அதீத அச்சம்தான்.

இதன் விளைவாக, ரோமானிய இராணுவம் மிகவும் பலவீனமடைந்தது. தான் சந்தித்த தோல்விகளால் மன்னர் இரண்டாம் கிளாடியஸ் மிகவும் கோபமடைந்தார். கடைசியில், மன்னர் ஒரு முடிவு எடுத்தார். அந்த முடிவு அந்தக் காலத்தில் நாட்டில் வாழ்ந்து காதலித்த காதலர்களுக்குப் பாதகமாக அமைந்தது. நாட்டில் திருமணத்தைத் தடை செய்வதே மன்னரின் முடிவாகும்.

இந்தச் சட்டத்தின் காரணமாகத் திருமணம் செய்து கொள்ளத் தயங்கும் காதலர்களுக்கு அந்த நேரத்தில் ஒரு குறிப்பிட்ட பாதிரியார் ரகசியமாக உதவத் தயாராக இருந்தார்.

புனித வேலண்டைன் ஒரு ரகசிய அறையில் இளைஞர்களைத் திருமணம் செய்யும் திட்டத்தைத் தொடங்கினார். இறுதியாக, நாட்டிலிருந்த இளைஞர்கள், ராஜாவிடமிருந்து ரகசியமாக, துறவியின் முன் தங்கள் காதலிகளை மணந்தனர்.

ஆனால் அது எல்லாம் மிகக் குறுகிய காலமே நீடித்தது. இந்தச் செய்தி மன்னருக்கு எட்டியதும், மன்னர் இரண்டாம் கிளாடியஸ் வீரர்களை அனுப்பி, துறவியைத் தனது அரண்மனைக்கு வரவழைத்தார். கத்தோலிக்க நம்பிக்கையைக் கைவிடுவதா அல்லது இறப்பதா என்பதைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு புனித வாலண்டைனுக்கு வழங்கப்பட்டது. இரண்டு முறை யோசிக்காமல், துறவி 'மரணத்தை' தேர்ந்தெடுத்தார். அதன்படி, மன்னர் துறவியைக் கொல்ல உத்தரவிட்டார். துறவி நீண்ட காலம் இருண்ட அறையில் சிறையில் அடைக்கப்பட்டார்.

இதற்கிடையில், சிறைச்சாலையின் தலைமைக் காவலரின் பார்வையற்ற மகளுக்குத் துறவியுடன் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அவள் அடிக்கடி தன் தந்தை மூலம் துறவியைச் சந்தித்துப் பல விஷயங்களைப் பற்றி விவாதித்தாள்.

அந்த நேரத்தில் பல இளம் பெண்கள் மரண தண்டனை விதிக்கப்பட்ட புனித வேலண்டைனைப் பார்க்க வந்தனர். துறவி சிறையில் அடைக்கப்பட்டிருந்த அறையின் சுவர்களில் அவர்கள் தங்கள் எண்ணங்களை எழுதினார்கள். அவர்கள் அறைக்குள் ரோஜாக்களை வீசினர். தங்களுக்காக உயிரைத் தியாகம் செய்யத் தயாராக இருந்த தங்கள் அன்புக்குரிய துறவியைப் பார்த்துப் பல இளம் பெண்கள் கண்ணீருடன் வீடு திரும்பினர். காலம் செல்லச் செல்ல, துறவிக்கும் பார்வையற்ற பெண்ணுக்கும் இடையே ஓர் அற்புதமான காதல் வளர்ந்தது.

புனித காதலர் தினத்தன்று தலை துண்டிக்கப்பட்ட நாள் வந்தது. அது பெப்ரவரி 14 ஆம் திகதி. சிறையிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்பு, புனித வாலண்டைன் தனது காதலிக்காகத் தனது அறையின் சுவரில் "உங்கள் வாலண்டைனிடமிருந்து அன்பு" என்ற குறிப்பை எழுதி வைத்தார். இறுதியில், ரோமில் காதலர்களின் பெருமூச்சுகளுக்கு மத்தியில் புனித காதலர் தனது உயிரைத் தியாகம் செய்தார்.

வாழ்க்கையில் பல கஷ்டங்களும் நிதி சிக்கல்களும் இருந்தாலும், வருடத்திற்கு ஒரு முறை வரும் இந்த நாளில் உங்கள் அன்புக்குரியவருக்குப் பரிசு வழங்குவது பொதுவான நடைமுறையாகும். அவற்றில், ரோஜாவும் ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளது. காதலைக் குறிக்கும் சிவப்பு ரோஜாக்களுக்கு இந்தக் காலத்தில் அதிக தேவை இருக்கும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

மனித உயிர்களுக்கு மட்டுமல்ல, பிறப்பு எடுக்கும் எல்லா ஜீவன்களுக்கும் இந்தப் பிறப்பு ஒரே ஒரு தடவைதான். இது ஓர் அரிய சந்தர்ப்பம். அடுத்த பிறவி பற்றி ஆராயாமல், தற்போது வாழும் காலத்தில் செய்ய வேண்டிய, நல்ல கருமங்களைச் செய்வதே சிறப்பானதாகும்.

இருக்கும் காலத்தில் நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதில் நேரிய தெளவும் உழைப்பும் அவசியமானது.

ஒவ்வொரு பொழுதுகளும் கடந்த வண்ணமிருக்கின்றது. எனவே போன பொழுது மீண்டும் எழுவதில்லை. அவதானமாக அறிவுடன் இயங்குவதே ஆக்கப்பூர்வமானதாகும்.

நாளைக்கு எனச் சொல்வதை நிறுத்துங்கள். ஆனால், எல்லா வேலைகளையும் ஒரே நாளில் செய்ய முடியாது. செய்யும் கருமங்களை அட்டவணைப்படுத்துக!

முறைப்படி கருமம் ஆற்றுவதற்கு, அவை பற்றிய அறிதலுடன், தெரியாதவற்றைக் கேட்டு உணர்ந்து செய்தால், காரிய சித்தி உண்டாகும்.

சில தடவைகள் எதிர்பாராத துன்பங்கள் நடப்பதும் இயற்கை. ஆனால், அதற்குள் தொடர்ந்து சுழலாமல், இயங்கியே ஆகவேண்டும்.

நமக்கும் குடும்பத்துக்கும் சேமிப்பு அவசியம் தேவை. உலகுக்கான சேவையை மறக்காதீர்கள்!

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை– 07

# சுதந்திரத்துக்கு முந்தைய பொருளதாரப் போக்குகள் -2

1939இல் இலங்கையின் பொருளாதாரம் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இருந்ததை விட மிகவும் வித்தியாசமாக இருந்த போதிலும், அது நீண்டகாலமாக நம்பியிருந்த ஏற்றுமதிப் பொருளாதார முறையுடன் இன்னும் நெருக்கமாக இணங்கியது. இந்நாட்டிற்கு ஒரு முயற்சி அனுபவமாக இருந்தது, ஒரு கட்டத்தில் ஏற்றுமதி வருவாய், 1926ஆம் ஆண்டு வருவாயின் 38 சதவீதமாகக் குறைந்தது. பெருந்தோட்டத் துறையின் விஸ்தரிப்பு மற்றும் அதனுடன் சென்ற வீதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய பொது வசதிகள் திடீரென நிறுத்தப்பட்டன. 1935 மற்றும் 1936ஆம் ஆண்டுகளில் கடுமையான மலேரியா தொற்றுநோய் நாட்டைச் சூறையாடியது. ஆயினும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் கடந்த கால பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் இலங்கை வாழ்வின் பல அம்சங்களில் காணக்கூடியதாக இருந்தது. தனிநபர் வருமானம் கடந்த காலத்திலிருந்ததை விட அதிகமாக இருந்தது மற்றும் தெற்காசியப் பிராந்திய சராசரியுடன் மிகவும் சாதகமாக ஒப்பிடப்பட்டது. எழுத்தறிவு சுமார் 60 சதவீதத்திற்கு முன்னேறியது. மேலும் கல்வி மற்றும் சுகாதார அமைப்புகள் வலுவாகவும் வளர்ச்சியுடனும் இருந்தன.

1939ஆம் ஆண்டில், 800,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் நாட்டின் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டனர், இது பாடசாலைக்குச் செல்லும் வயதுடைய மொத்த மக்கள்தொகையில் 40 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இந்த கல்வி கற்பித்தலில் 21,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணியாற்றினர். மாணவர்கள் அரசுப் பாடசாலைகள் மற்றும் தனியார் அரசு உதவி பெறும் பாடசாலைகளுக்கு இடையே சமமாகப் பிரிக்கப்பட்டனர். மிகக் குறைந்த எண்ணிக்கையிலான கூடுதல் உதவி பெறாத தனியார் நிறுவனங்களிலும் கலந்து கொண்டனர். நாட்டின் பாடசாலை அமைப்பு இந்த கட்டத்தில் உலகளாவிய கல்விக்கான பாதையில் கிட்டத்தட்டப் பாதியிலேயே இருந்தது. பார்த்தபடி, இந்த வளர்ச்சியில், அரசுப் பாடசாலைகளை (பெரும்பாலும் கிராமங்களில்) நிறுவுவதிலும், தோட்டங்களிலும் நகரங்களிலும் தனியார் பாடசாலைகளுக்கு உதவுவதிலும் அரசு முக்கிய பங்காற்றியது.

ஆசியத் தரத்தின்படி சுகாதார சேவைகளும் இதேபோல் மேம்பட்டன. 1939ஆம் ஆண்டில் இலங்கையில் 120 மருத்துவமனைகள் இருந்தன, இதில் 10,000 படுக்கைகள் இருந்தன, மக்கள் தொகையில் 500 பேருக்கு ஒன்று. அவற்றில் 400க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் பணிபுரிந்தனர், மேலும் 3,000 பேர் ஏனைய மருத்துவப் பணிகளில் பணியாற்றினர். மேற்கத்தியக் கல்வியைப் போலவே, மேற்கத்திய மருத்துவமும் கிராமப்புறங்களில் பரவியமை ஒரு சக்திவாய்ந்த பண்பாட்டு விளைவைக் கொண்டிருந்தது. பொருளாதாரம் தொடங்கவிருக்கும் மாற்றத்தின் காலகட்டத்திற்கு அடித்தளம் அமைக்க இது உதவியது.

அரசியல் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் இங்கு ஒரு குறிப்பு சேர்க்கப்பட வேண்டும். 1931இன் டொனமூர் அரசியலமைப்பின் மூலம் தீவுக்கு வயது வந்தோருக்கான வாக்குரிமை மற்றும் கணிசமான அளவு உள்ளக சுயாட்சி வழங்கப்பட்டது. முப்பதுகளில் எதிர்கால அரசியல் தலைவர்களின் கரு உருவாகத் தொடங்கியது. 50 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பிரித்தானிய முடியின் 8 நியமன உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்ட அவை, உள் விவகாரங்களில் சட்டம் இயற்றுவதற்காக அமைக்கப்பட்டது மற்றும் அதன் 7 உறுப்பினர்கள் உள்நாட்டு விவகாரங்களைக் கையாளும் 7 அமைச்சகங்களை நிர்வகிக்கும் கடமையை ஏற்றுக்கொண்டனர். உள்துறை, விவசாயம் மற்றும் நிலங்கள், உள்ளூர் நிர்வாகம், ஆரோக்கியம், தொழிலாளர், தொழில் மற்றும் வர்த்தகம், கல்வி மற்றும் தகவல் தொடர்பு மற்றும் பணிகள். இந்த அரசியலமைப்பு மாற்றத்தின் ஒரு விளைவு என்னவென்றால், பொருளாதாரத்தின் பல்வகைப்படுத்தல் மற்றும் சாத்தியமான தொழில் மயமாக்கலுக்கான ஆர்வம் புதிய தலைவர்களுடன் முன்னுக்கு வந்தது. 1934இல் வெளிவந்த இலங்கை வங்கி ஆணைக்குழுவின் அறிக்கை இந்தப் புதிய ஆர்வத்தைப் பிரதிபலித்தது. அது தொழில்துறை ஊக்குவிக்கப்பட வேண்டும், தோட்டங்களில் குறைந்துள்ள இலாபத்தைச் சீர்படுத்த வேண்டும், உள்நாட்டு வங்கியின் உருவாக்கம் அதன் வளர்ச்சிக்கு உதவும் போன்ற கருத்துக்களுக்கு ஆதரவை வெளிப்படுத்தியது. ஆனால், இதற்குப் பாரிய ஆதரவு இருக்கவில்லை.

இந்நிலையில் இலங்கை வங்கி, ஒரு பொது-தனியார் கூட்டு நிறுவனமாக, பிரித்தானிய எதிர்ப்பின் பேரில் 1938இல் நிறுவப்பட்டது. 1920களில் ஆங்கிலேயர்களால் தொடங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட லக்சபான நீர்மின் திட்டப் பணிகள் 1937இல் மீண்டும் தொடங்கப்பட்டது. இது காற்றமுத்த தாழ்வு நிலையால் கைவிடப்பட்டது. பல முன்னோடியான மாதிரி ஆலைகள் அமைக்கப்பட்டன மற்றும் திட்டமிடப்பட்ட தொழில் மயமாக்கல் திட்டம் வேகமெடுக்கத் தொடங்கியது. இரண்டாம் உலகப் போரில் இந்த முன்னேற்றத்தில் தலையிட்டது. இவ்வாறு, 1930களில் உறுதியான சில முன்னேற்றங்கள் நிகழ்ந்தன.

ஆனாலும், விவசாய அமைச்சு தனக்கு வேண்டுமெனக் கேட்டுப் பெற்ற டி.எஸ்.சேனாநாயக்க, தனது தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காகச் செயலாற்றத் தொடங்கினார். அவர் உலர் வலயத்தில் விவசாயிகளைப் பரந்தளவில் மீள் குடியேற்றுவதற்கான திட்டங்களை உருவாக்கினார். இதற்கு கடந்தகால வரலாற்றைத் திணைக்களத்தினர். அனுராதபுர இராச்சியத்தின் விவசாயச் செழுமை பற்றிப் பேசினார். இதன் பின்புலத்தில் இனவாதம் தொட்ட தெளிவாக இருந்தது. ஆனால், நீர்ப்பாசன முறைகள் முழுமையாகச் சீரழிந்த உலர்வ லயத்தில் திட்டமிடப்படாத சிங்களக் குடியேற்றங்கள் பாரிய பிரச்சனைகளை உருவாக்கின. அதைச் சரிசெய்ய நாட்டின் பொருளாதார சேமிப்பிலிருந்து கணிசமான பணம் செலவானது.

1930களில் உருவாகத் தொடங்கிய மாற்றத்தின் பலன்கள் நாற்பதுகளில் முழு முதிர்ச்சி அடைந்தன. அந்த தசாப்தத்தின் மூன்று வளர்ச்சிகள் முக்கியமானவை,
(1) ஏற்றுமதி பொருளாதாரத்தின் பாரம்பரிய சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது,
(2) நிச்சயமற்ற எதிர்காலத்திற்கு மாறுவதற்கான காலகட்டத்திற்கு வழிவகுத்தன,
(3)இரண்டாம் உலகப் போர், சுதந்திரம் மற்றும் தீவின் மக்கள்தொகை வளர்ச்சியின் வடிவத்தில் புரட்சிகர மாற்றங்களைக் கொண்டு வந்தது.

1940களில் இலங்கையின் பொருளாதாரத்தில் இயங்கிய மூன்று பெரிய மாற்றச் சக்திகளில்,இரண்டாமுலகப் போர் அதன் நீண்டகால விளைவுகளில் சில வழிகளில் மிக முக்கியமானதாக இருந்தது. முப்பதுகளின் தேக்கநிலையுடன் பொதுவாக, இது பெரும்பாலும் கடந்த கால அனுபவத்தின் மறுபரிசீலனையாக இருந்தது. முதல் உலகப் போரைப் போலவே, இரண்டாம் உலகப் போரும் ஏற்றுமதி பொருளாதாரத்தின் வழக்கமான வளர்ச்சியை நிறுத்தியது, ஆனால், போர் நிறுத்தப்பட்ட பின்னர் பழைய பொருளாதார ஒழுங்கை மீண்டும் நிறுவக்கூடாது என்பதற்கான காரணத்தை அது வழங்கவில்லை. எவ்வாறாயினும், மறைமுகமாக, தெற்காசியாவில் பிரித்தானிய ஆட்சியின் முடிவை விரைவுபடுத்தியதன் காரணமாக, இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் போர் ஒரு முக்கியமான அம்சமாக மாறியது.

இரண்டாம் உலகப் போரின் பொருளாதார விளைவுகள் பற்றிய மிகவும் குறிப்பிடத்தக்கப் புள்ளிகளில் ஒன்று அவற்றின் பொதுவான நிலையற்ற தன்மை ஆகும். வழக்கமான இறக்குமதி பாய்ச்சலை மீண்டும் தொடங்குவதே இலங்கை அரசின் நோக்கமாக இருந்தது. ஆனால், மறுபுறம் போரினால் ஏற்பட்ட ஏற்றுமதித் தடைகளால், அரசாங்க மற்றும் தனியார் உற்பத்தி ஆலைகளில் பெரும்பகுதி சரிந்தது. கொள்கை வகுப்பாளர்களின் ஆரம்ப உந்துதல் வரிகள், செலவுகள் மற்றும் கட்டுப்பாடுகளின் போருக்கு முந்தைய கட்டமைப்பிற்குத் திரும்புவதாகும். இது மிகத் தவறான பொருளாதாரக் கொள்கைப் போக்குகளை எடுத்துக்காட்டுகிறது. இது சொல்கிற செய்தி வலுவானது. இலங்கையின் பொருளாதாரத்தை சுயசார்பின் அடிப்படையிலும், குறைந்த நுகர்வின் அடிப்படையிலும் வளர்த்தெடுப்பதற்குப் போர் ஏற்படுத்திக் கொண்ட நல்வாய்ப்பை இலங்கையின் கொள்கை வகுப்பாளர்கள் தவறவிட்டார்கள்.

1948இன் முற்பகுதி வரை இலங்கை முழு சுதந்திரத்தை அடையவில்லை, மேலும் இலங்கையர்கள் ஆட்சியின் முழுக் கட்டுப்பாட்டைப் பெற்ற பின்னரும், முப்பதுகளிலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் வேறுபட்ட பொருளாதாரத்தைக் கொண்டுவருவதற்கான விருப்பம் உருவாகி முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, நாற்பதுகளின் பிற்பகுதியில் விவசாய உற்பத்தியில் தேக்க நிலை மற்றும் தொழில்துறை உற்பத்தியில் சரிவு ஏற்பட்டது. இது சுதந்திர இலங்கையின் பொருளாதாரம் நிலையற்றதாகவும் நெருக்கடிக்கு ஆளாவதாகவும் இருக்கும் என்பதைக் காட்டின. சுதந்திரத்துக் முன்பிருந்தே சுய ஆட்சிக்கான வாய்ப்பைப் பெற்ற இலங்கையர்கள் நீண்டகால நோக்குடைய பொருளாதாரத் திட்டமிடலைச் செய்யத் தவறினர். ஏனெனில், அதிகாரத்திலிருந்த உயர் குடியினரே பெரும்பாலான அவசியமற்ற இறக்குமதிகளின் நுகர்வோராக இருந்தனர். தொய்வடைந்து வந்த ஏற்றுமதித் துறையின் இலாபங்களை அனுபவிப்போராக இருந்தனர். எனவே, அவர்களது நலன்களின் பார்வையிலேயே நாட்டின் நலன் நோக்கப்பட்டது. இது இன்றுவரைத் தொடர்கிறது.

## கடிதங்கள்

### சுற்றுலா பயணிகளை முகம் சுழிக்க செய்யும் சுற்றுலா தளங்கள்

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மொத்தமாக 3,32,439 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இனிவரும் காலங்களில் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தரும் எண்ணிக்கை கூடுவதற்கான வாய்ப்புகள் இருக்கும் சூழ்நிலையில், சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் இடமாக உள்ள கிழக்கு மாகாண சுற்றுலாத் தலங்களில் கழிப்பறை வசதிகள் கூட ஒழுங்கான நிலையில் இல்லாதிருப்பதாகச் சுற்றுலாப் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கன்னியா வெந்நீரூற்று, பளிங்கு கடற்கரை போன்ற இடங்களில் சுற்றுலாப் பயணிகளிடம் நுழைவு சீட்டு பெற்று அனுமதிக்கப்பட்டாலும், அப்பிரதேசங்களில் பயன்படுத்தும் சுத்தமான கழிவறை வசதிகள் இல்லை. உடை மாற்றும் இடங்களில் கூட துர்நாற்றம் வீசுவதாகவும், மனித கழிவுகள் உள்ளதாகவும் சீரான பராமரிப்பு இல்லாமல் இருப்பதாகவும் அதனால் பல்வேறு அசௌகரியங்களை சந்திப்பதாகவும் சுற்றுலா பயணிகள் தெரிவிக்கிறார்கள்.

இந்த விடயத்தில் கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம், சுற்றுலா அமைச்சு என்பன அவசரமாக கரிசனை செலுத்தி பாவனைக்கு பொருத்தமான இடங்களாக இவற்றை புனரமைக்குமாறு சுற்றுலா பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- நூருல் ஹுதா உமர்

## அழகான உலகத்தை உருவாக்கிட

# “ஒன்றுசேர்வோம்”



**தேச எல்லைகளைக் கடந்து பயணிக்கின்ற சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக நாங்கள் உலகளாவிய பிரஜைகள் என்றவகையில், ஒன்றிணைய வேண்டுமென்பது மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது**

**அரச நிறுவனக் கட்டமைப்பும் உத்தியோகத்தர் குழாமும் தமது செயற்பாங்குகள் பற்றிப் பொறுப்பு வகிப்பதன் மற்றும் பொறுப்புக்கூற வேண்டியதன் அவசியம் எதிர்கால உலகம் மீது தீர்மானகரமானதாகத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது**

**நிலைபெறுதற்குப் பெறுமதிகளை அடிப்படையாகக்கொண்ட உலக சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புகையில் உலகின் பல்வேறு கலாசார மரபுகளின் நன்மதிப்பினைப் பேணிவரவேண்டியதும் முக்கியமானதாக அமைகின்றது**

மனித வரலாற்றின் தீர்மானகரமான திருப்புமுனையில் இருந்துகொண்டு முன்னொருபோதும் இருந்திராத உலகளாவிய ஒத்துழைப்பினை வேண்டிநிற்கின்ற தருணத்தில் நடாத்தப்படுகின்ற தனித்துவமான மாநாட்டில் உரை நிகழ்த்தக் கிடைத்தமை மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற உலக அரச உச்சி மாநாட்டில் புதன்கிழமை (12) உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் எனது நாடு வியத்தகு வரலாற்றினையும் எதிர்காலம் பற்றிய சுபமான கனவினைக் காண்கின்ற நிகழ்காலத்தையும் அகல் விரிவான அரசியல் மற்றும் சமூக அறிவினாலும் கட்டி வளர்க்கப்பட்ட பிரஜைகளைக் கொண்ட அழகான தீவாகும். உலகின் எந்தவொரு நாட்டிலும் இடம்பெறுகின்ற சம்பவம் பற்றிய ஒத்துணர்வு எனது நாட்டு மக்களிடம் நிலவுகின்றது.

அவர்கள் மரபுகளை நேசிப்பதைப்போன்றே மாற்றப்படவேண்டிய இடங்களை மிகவும் விவேகமான வகையில் மாற்றிக்கொள்ளும் அளவிற்கு விரிவான சமூக அறிவு நிரம்பியவர்களாவர்.

அதைப்போலவே உங்கள் கையில் இருக்கின்ற கையடக்கத் தொலைபேசியில் இத்தருணத்தில் இணையத்தளத்தை பரிசீலனை செய்து பார்த்தால் “உலகில் மிகவும் அதிகமாகக் கண் தானம் வழங்குகின்ற நாடு எது?” இந்திய துணைக்கண்டத்தின் ஓரத்தில் அமைந்துள்ள நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற நாட்டையே நீங்கள் காண்பீர்கள். அதுவே இலங்கை. அத்தகைய பொதுநலம் கருதுகின்ற இரக்கமுள்ள இதயம் படைத்த பிரஜைகள் வசிக்கின்ற நாட்டைப் பிரதிநிதித்தும்செய்து உங்கள் முன் உரையாற்றக் கிடைத்ததையிட்டு எனது நாட்டின் பிரஜைகளின் பெயரால் நான் பெருமிதம் அடைகிறேன்.

மானிட வர்க்கம் பற்றிய முக்கியமான பிரிவுகளில் எதிர்கால உபாய மார்க்கங்களையும் திட்டங்களையும் அபிவிருத்தி செய்தல் மீது கவனஞ் செலுத்தி நடாத்தப்படுகின்ற இந்த மாநாடு எதிர்கால உலகின் நல்வழியுரிமைக்கு உறுதுணையாக அமையுமென நான் நம்புகிறேன்.

நிகழ்காலத்தில் நாங்கள் நாடுகள் என்றவகையிலும் பிராந்திய ரீதியாகவும் சர்வதேச மட்டத்திலும் எதிர்நோக்குகின்ற சிக்கல்கள் அளப்பரியவை. அதைப்போலவே சிக்கல் நிறைந்தவையாகும்.

இந்த பிரச்சினைகளைப் பொருட்படுத்தாத ஒருசிலர் தமது சுயநலப் பயணத்தில் ஈடுபட்டுள்ளார்கள். எனினும் இன்றைய நாளின் தனிப்பட்ட பிரச்சினைகள் நாளைய தினத்தில் முழு உலகினதும் கதவுகளைத் தட்டுகின்ற பிரச்சினைகளாக மாறும் வேளையில் அவர்களின் சுயநலப் பயணம் முற்றுப்பெறும்.

அதனால் தேச எல்லைகளைக் கடந்து பயணிக்கின்ற சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக நாங்கள் உலகளாவிய பிரஜைகள் என்றவகையில் ஒன்றிணைய வேண்டுமென்பது மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது.

அதனால் இந்த சவால்களை எதிர்கொள்வதற்காகக் கூட்டான உலகளாவிய செயல் வழிமுறையும் ஒருங்கிணைந்த முன்னணியொன்றும் அவசியமாகின்றது.

ஆளுகையின் பொறுப்புக்கூறல் மற்றும் வினைத்திறனை அதிகரித்தல் எதிர்கால உலகிற்கு அத்தியாவசியமாகின்றது. அது பிரஜைகளை தனித்தனியாக கூட்டு முயற்சியொன்று வரை கொண்டுவருவதற்காகப் பழக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

அரச நிறுவனக் கட்டமைப்பும் உத்தியோகத்தர் குழாமும் தமது செயற்பாங்குகள் பற்றிப் பொறுப்பு வகிப்பதன் மற்றும் பொறுப்புக்கூறவேண்டியதன் அவசியம் எதிர்கால உலகம் மீது தீர்மானகரமானதாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

சமூக நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சியானது தரமிக்க தேசமொன்றைப் போன்றே விளைவுவள மிக்க உலகமொன்றுக்கு மிகவும் முக்கியமானதாக அமைகின்றது.

உடன்படிக்கைகளையும் சட்டங்களையும் முறைசார்ந்தவகையில் அமுலாக்குவதும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் உறுதி நிலையற்ற சமுதாயங்களுக்கு முறைப்படி ஒத்துழைப்பினை வழங்குவதும் உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காகச் சுதந்திர ஊடகங்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குவதும் மிகமுக்கியமானதாக அமைகின்றது.

1948 மனித உரிமைகள் நிகழ்ச்சிநிரலில் இருந்திராத டிஜிட்டல் அணுகலுக்கான உரிமைகள் சுற்றாடலுக்கான உரிமைகள் புதிய உரிமைகள் மற்றும் அரசியல் முறைமைகள் தோன்றியமை மனித உரிமைகள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட அனைத்துலகப் பிரகடனமொன்றின் அவசியத்தை வேண்டிநிற்கின்றது. அது தொடர்பில் கரிசனை கொண்டு இடையீடுசெய்ய வேண்டியதன் அவசியத்தை இத்தருணத்தில் ஞாபகப்படுத்துகிறேன்.

நிலைபெறுதற்குப் பெறுமதிகளை அடிப்படையாகக்கொண்ட உலக சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புகையில் உலகின் பல்வேறு கலாசார மரபுகளின் நன்மதிப்பினைப் பேணிவரவேண்டியதும் முக்கியமானதாக அமைகின்றது.

மிகவும் வறிய நாடுகளில் நூற்றுக்கு 60 வீதத்திற்குக் கிட்டியவை கடன் நெருக்கடியில் அல்லது கடன் நெருக்கடியின் உயர்மட்ட அபாயநேர்வில் இருக்கின்ற நிலைமையில் எதிர்காலம் மற்றும் உலகளாவிய பொருளாதாரம் பற்றிய பாரதூரமான பெருமூச்சு விடப்படுகின்றது. உலகளாவிய நிதியளிப்பு நிபந்தனைகள் அதிகரிக்கின்றமை எதிர்காலத்தில் செலுத்தப்படவுள்ள பெருந்தொகையான கடனைச் செலுத்துதல் மற்றும் இறையாண்மைக் கடன் நெருக்கடிக்கு முகங்கொடுக்க நிகழ்கால சர்வதேச நிதிக்கட்டமைப்பு பலவீனமானவகையில் தயாராகியமையால் உலகளாவிய நோக்கு மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளது. நவீன உலகிற்கு நியாயமானவகையில் சீராக்கிக்கொள்ளக்கூடிய நிதிசார் திருத்தங்களின்பால் நிலை மாற்றமடைவது மிகவும் முக்கியமான விடயமாக அமைகின்றது.

காலநிலை மாற்றங்கள் உயிர்ப்பன்வகைமை அற்றுப்போதல் மற்றும் கடுமையான ஊழல் போன்ற கட்டுப்பாடற்ற கைத்தொழில் வளர்ச்சியின் படுமோசமான பாதக விளைவுகளை நோக்கி இந்த கிரகம் பயணித்துக்கொண்டிருக்கிறது. அது புவியை நோக்கிப் பல ஒளியாண்டு வேகத்தில் வருகின்ற கொடூரமான விண்கற்களை விடப் பயங்கரமானதாகும். பெரும்பாலும் ஒருசில அபிவிருத்தியடைந்த நாடுகள் காபன் டயொக்சயிட் உமிழ்வின் முக்கால்வாசிக்கு பங்களிப்புச் செய்துள்ளபோதிலும், அவை காலநிலை மாற்றங்களின் தாக்கத்திற்கு மிகவும் குறைவாகவே இலக்காகின்றன.

அபிவிருத்தியின் மகுடத்திற்கான தூரம் நீண்டதாக இருந்தபோதிலும் இயற்கை அழகு நிறைந்த குறைந்த வருமானம் பெறுகின்ற பல நாடுகளின் வனப்பு வேறு தரப்பினர்களின் கழிவுப்பொருட்களால் அழிவடைந்து வருகின்றது. அத்தகைய நாடுகளும் தீவுகளும் கொண்டுள்ள அழகான கடற்கரைப் பரப்புகள் அந்த அனர்த்தங்களுக்கு இரையாகி உள்ளன.

வாழ்நாளில் என்றாவது ஒருநாள் நீங்கள் எமது நாட்டுக்குச் சுற்றுலா மேற்கொண்டால் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பு பற்றி நீங்கள் வியப்படைவீர்கள். அதைப் போலவே உங்களை மட்டற்ற மகிழ்ச்சியில் பூரிப்படையச் செய்விக்கின்ற விருந்துபசாரத்தை எமது மக்கள் உங்களுக்கு வழங்குவார்கள். விருந்தோம்பலை நாங்கள் இயல்பாகவே உங்களுக்கு வெகுமதியாக வழங்கினாலும் எமது நாட்டின் கரையோரப் பரப்பினை அழகாகப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு தேசமென்றவகையில் நாங்கள் விடாமுயற்சியுடன் அர்ப்பணிப்புச் செய்துவருகிறோம்.

டிஜிட்டல் புரட்சி ஏற்கெனவே மனிதர் வாழ்கின்ற விதம் வேலை செய்கின்ற விதம் மற்றும் தொடர்பாடலில் ஈடுபடுகின்ற விதம் என்பவற்றை மாற்றியுள்ளது. பில்லியன் கணக்கான மக்கள் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் விளைவாற்றல்மிக்க வாழ்க்கையைக் கழிப்பதற்காகவும் உதவுகின்ற ஆற்றலைக் கொண்டுள்ள அந்த தொழில்நுட்பமே உலகம் முழுவதிலுமுள்ள பிரஜைகளுக்கும் அரசாங்கங்களுக்கும் புதிய சவால்களை உருவாக்குகின்றதென்பதையும் எம்மால் மறந்துவிட முடியாது.

மிகவும் எளிமையாகக் கணினி வைரஸ் ஒன்று பற்றிச் சிந்தியுங்கள். அது துப்பாக்கிக் குழாய் மூலமாகச் சுடுவதோ அல்லது ஆகாய விமானத்திலிருந்து அணுக்குண்டு வீசுவதோ அல்லது ஏவுகணை எறிகின்ற கருவி மூலமாகத் தாக்குதலை நடாத்துவதோ கிடையாது. எனினும், கடந்த காலத்தில் அணுவாயுத தாக்குதலைப் பார்க்கிலும் பாரிய அச்சுறுத்தல் சைபர் தாக்குதல் ஊடாக இடம்பெற்றுள்ளது. ஆயுதங்களைக்கொண்ட மரபுரீதியான யுத்தங்களின்போது சிவிலியன்கள் இலக்காகக்கொள்ளப்படுதல் போன்றவற்றுக்கு எதிராகச் சர்வதேச சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.சைபர் யுத்தங்களுக்கு அத்தகைய சட்டங்கள் அவசியமல்லவா ?

அதேவேளையில் எதிர்வரும் இரண்டு தசாப்தங்களில் சனத்தொகை அதிகரிப்பு, நகரமயமாக்கல் மற்றும் நுண்ணங்கிகளின் எதிர்ப்பு காரணமாக பல்வேறு சுகாதாரச் சவால்கள் தொடர்ச்சியாக நிலவவும் விரிவடையவும் இடமுண்டு.

மனிதர்கள் என்றவகையில் நாங்கள் தவிர்க்கமுடியாத வகையில் இடைத்தொடர்களைப் பேணி வருகிறோம். ஒருவருடத்திற்கு மேற்பட்ட காலமாக வைரஸ் ஒன்றினால் கிரகமொன்றின் பெரும்பாலான மனிதர்களின் முகங்களை முகக்கவசம் மூலமாக மூடிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது உலகின் பலம் பொருந்திய நாட்டிலிருந்து மிகவும் வறிய நாடு வரை கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தியது.

2024 இல் தொற்றுநோய்களின் அதிகரிப்பினை அல்லது மீள் வருகையினை காணக்கிடைத்தது. தொற்றா நோய்கள் மத்தியில் புற்றுநோய் உயிர்கள்மீது வழமைக்கு மாறான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இத்தருணத்திலும் வாழ்வா? சாவா? என அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்ற மில்லியன் கணக்கான புற்றுநோயாளிகள் இருக்கிறார்கள். இதய நோய்கள் தேச எல்லைகளைப் பொருட்படுத்தாமல் உயிர்களை அச்சுறுத்தி வருவதோடு அது பயங்கரமான ஓர் அனர்த்தமாக மாறியுள்ளது. 2030 ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதிலும் மனநோய்க்கான பொருளாதாரக் கிரயம் 16 ரில்லியன் டொலர்களை விஞ்சியதாக அமையுமெனச் சுகாதார நிபுணர்கள் எதிர்வு கூறுகிறார்கள்.

காலநிலை நெருக்கடி காரணமாக 2050 அளவில் மேலும் 14.5 மில்லியன் இறப்புகள் பதிவாகுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

டிஜிட்டல் சுகாதாரம், புதிய தொழில்நுட்பம் மற்றும் நவீன சுகாதார உபகரணங்கள், சுற்றாடல் சுகாதாரமும் நிலைபெறுதகுதன்மையும், பொருளாதார அபாயநேர்வுமிக்க நாடுகளுக்கான சுகாதார ரீதியான நிதிசார் ஒத்துழைப்பு பற்றிய அடிப்படைக் கவனம் செலுத்தப்படவேண்டியது மிகவும் முக்கியமானதாக அமைகின்றது.


நீங்கள் சிலவேளை மத்திய கிழக்கினை பிரதிநிதித்துவம் செய்யக்கூடும். சிலவேளை அபிரிக்கா சிலவேளை ஆசியா அல்லது சிலவேளை ஐரோப்பா அல்லது மேற்குலகினை நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யக்கூடும். எனினும், நாங்கள் அனைவரும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைப் போன்றே எமது இதயங்களின் ‘லப் டப்’ ஓசையும் ஒன்றாக ஒன்றுசேர்ந்து உலகத்தைக் கட்டியெழுப்புவோம் என்கின்ற மன்றாட்டையே செய்கின்றது.

“நாங்கள் சகோதரர்கள் என்றவகையில் ஒன்றாக வாழப் பழகிக்கொள்ளவேண்டும்.” என மார்ட்டின் லூதர் கிங் கூறியுள்ளார். அவ்வாறு இல்லாவிட்டால் இடம்பெறப் போவதையும் அவர் கூறியிருக்கிறார்.

நாங்கள் எமது நாட்டு மக்களுக்கு ஒரு நோக்கத்தைச் சேர்த்தோம். அது “வளமான நாடு - அழகான வாழ்க்கை” என்பதை உருவாக்கிட ஒன்றுசேர்வோம் என்பதாகும். வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில் அவர்கள் அதனை அங்கீகரித்தார்கள்.

“நாங்கள் ஒன்றுசேர்ந்து அழகான வாழ்க்கையை அழகான உலகத்தை உருவாக்கிடுவோம்” என இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநாட்டில் நான் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

அனைவருக்கும் நன்றி.



# நவம் மகா பெரஹெராவின் இறுதி நாள்...

கொழும்பு-02 ஹுனுப்பிட்டிய கங்காராமய விகாரையின் வருடாந்த நவம் மகா பெரஹெராவின் இறுதி நாள் நிகழ்வு புதன்கிழமை (12) நடைபெற்றதுடன் புத்தசாசன மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் சுனில் செனவி புனித கலசத்தை சடங்கு யானை மீது வைத்து-பெரஹெராவை-ஆரம்பித்துவைத்தார்.


இந்த நிகழ்வில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்ரமசிங்க , மைத்திரிபால சிறிசேன, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்துகொண்டனர் மேலும் பாரம்பரிய மேளக்காரர்கள், நடனக் கலைஞர்களுடன் கூடிய-துடிப்பான பாரம்பரிய நடன நிகழ்வுகள் சவுக்கடி பட்டாசுகள் மற்றும் பெற வாத்தியங்கள் பிரமாண்டமான பெரஹெராவிற்கு வண்ணம் சேர்த்தன.

































# காதலர் தினத்தை SUN SIYAM பாசிகுடாவில் கொண்டாடுங்கள்

இந்த காதலர் தினத்தில், இலங்கையின் மாசற்ற கிழக்கு கரையோரத்தில் மனம்மறவாத இனிமையான காதல் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள Sun Siyam பாசிகுடாவுக்கு விஜயம் செய்யுமாறு Sun Siyam பாசிகுடா ஹோட்டல் அழைத்துள்ளது. இலங்கையின் மாசற்ற கிழக்கு கரையோர பகுதியில் அமைந்துள்ள இந்த ஐந்து நட்சத்திர ரிசோர்ட் இனால் மனம் மறவாத காதலர் தின அனுபவத்தை எதிர்பார்க்கும் ஜோடிகளுக்கு சொகுசான மற்றும் பிரத்தியேகமான அனுபவத்தை வழங்க தயாராகவுள்ளது.

Sun Siyam பாசிகுடாவின் 34 கண்கவர் முறையில் வடிவமைக்கப்பட்ட நவீன வசதிகளைக் கொண்ட கரையோரத்தை மற்றும் தோட்டத்தை முகப்பாக கொண்ட பெவிலியன்கள், காதல் கதை பேசவும், ஓய்வான முறையில் பொழுதை செலவிடவும் சிறந்த தெரிவாக அமைந்துள்ளன. விருந்தினர்கள் அறைகளை அரைப் பங்கு செலவில் மேம்படுத்திக் கொள்ளும் வசதியை பெறுவதுடன், கிழக்கு கரையோரத்தில் அமைந்துள்ள மாபெரும் வைன் விற்பனை நிலையத்தில் champagne dinnersக்கு 20% சேமிப்பையும், சகல உணவருந்தல்களுக்கும் மற்றும் சகல ஜோடிகளுக்கான ஸ்பா அனுபவங்களுக்கும் 15% விலைக்கழிவையும் பெறலாம்.

அதிகளவு இடவசதி படைத்த பெவிலியன்களினூடாக கடலை கண்டு களிக்கும் அனுபவம் வழங்கப்படுவதுடன், ரிசோர்ட்டின் சூழலை கவனத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வடிவமைப்புகளினூடாக பிரத்தியேகத்தன்மை மற்றும் சௌகரியம் போன்றன உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், நிலைபேறாண்மையை உறுதி செய்யும் வகையில் Sun Siyam பாசிகுடாவின் ஒவ்வொரு அம்சங்களும் கட்டமைக்கப்பட்டுள்ளன. விருந்தினர்கள் கரையோரங்களில் காதல் கதைகளை பேசவும், தமது பிரத்தியேகமான டெரஸ்களிலிருந்து சூரிய அஸ்தமன காட்சிகளை பார்வையிடவும், மனம் மறவாத அனுபவங்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

சாகசங்களில் ஆர்வமுள்ளவர்கள் பாசிகுடா பகுதியில் நீர் விளையாட்டுகளில் பங்கேற்க முடியும். jet skiing முதல் snorkeling போன்றன அவற்றில் அடங்கியுள்ளன. அனுபவத்தை பூர்த்தி செய்வதற்கு, ரிசோர்ட்டின் ஸ்பா பகுதியினூடாக புத்துணர்வூட்டும் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

இலங்கையின் பிரத்தியேகமான சுவைத் தெரிவுகளை பாரம்பரிய முறையில் அனுபவிக்க முடியும். விருந்தினர்களுக்கு Tea House இல் பிரத்தியேகமான தேநீர் சுவைக்கும் அனுபவத்தை பெற முடியும். நீச்சல் தடாகத்திற்கு அருகில் உணவருந்தும் அனுபவத்தைப் பெற Slice & Grill ஐ அணுக முடியும். கெரிபியன் அனுபவத்தை வெப்ப வலய பானங்களை அருந்தி மகிழ Beach Shack ஐ நாட முடியும்.

மனம் மறவாத காதலர் தின அனுபவத்தைப் பெற, பாசிகுடாவின் கரையோர அனுபவத்தை பெற அல்லது நட்சத்திரங்களின் கீழ் தனிப்பட்ட இரவு உணவு வேளையை அருந்தி மகிழும் அனுபவத்தைப் பெற சிறந்த தெரிவாக Sun Siyam பாசிகுடா அமைந்துள்ளது.

# Sun Siyam பாசிகுடா 77ஆவது சுதந்திர தின கொண்டாட்டம்



இலங்கையின் மாசற்ற கிழக்குக் கரையோரத்தில் சொகுசான மற்றும் நிலைபேறான ஹோட்டலாக திகழும் Sun Siyam பாசிகுடா, தேசத்தின் 77ஆவது சுதந்திர தினத்தை அண்மையில் கொண்டாடியது. நாட்டின் சுற்றுலாத் துறை பெருமளவு மீட்சியடைந்துள்ள நிலையில், இந்த வைபவம் கொண்டாடப்பட்டதுடன், கிழக்கு கரையோரத்தின் மாசற்ற கடற்கரைகள், பரந்த உணவுத் தெரிவுகள் மற்றும் பெறுமதி வாய்ந்த கலாசார அனுபவங்களுடன் அமைந்திருந்தது.

இந்த நிகழ்வை முன்னிட்டு Sun Siyam பாசிகுடா, ஒற்றுமை மற்றும் கொண்டாட்டத்தை குறிக்கும் வகையில், விருந்தினர்கள் மற்றும் ஊழியர்களுக்காக பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது. தேசியக் கொடி உயர்த்தலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியதுடன், விருந்தினர்கள் மற்றும் ஹோட்டலின் ஊழியர்கள் இலங்கை கொடியை பெருமையுடன் ஏற்றியிருந்தனர். அதனைத் தொடர்ந்து தேசிய கீதம் பாடப்பட்டது.

Sun Siyam பாசிகுடாவின் பொது முகாமையாளர் அர்ஷெத் ரிபாய் கருத்துத் தெரிவிக்கையில், “நாம் 77ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுகையில், உள்நாட்டு சமூகங்களின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குவதிலும், அதிசிறந்த அனுபவங்களை பெற்றுக் கொடுப்பதிலும் Sun Siyam பாசிகுடா தன்னை தொடர்ந்தும் அர்ப்பணித்துள்ளது. கிழக்கின் அழகை ரசிப்பதற்காக மாத்திரம் நாம் விருந்தினர்களை வரவேற்பதில்லை, நாட்டின் சுற்றுலாத் துறை மீட்சியில் பொருளாதார பெறுமதி சேர்ப்பினூடாக பங்களிப்பையும் வழங்குகின்றோம். அதற்காக நிலைபேறான மற்றும் சொகுசான விருந்தோம்பலை ஊக்குவிக்கின்றோம்” என்றார்.

பாரம்பரிய தேநீர் விருந்துபசாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், உள்நாட்டின் செழுமையான தேநீர் தெரிவுகளை விருந்தினர்கள் அருந்தி மகிழ்ந்தனர். விசேட கேக் வெட்டும் நிகழ்வும் இதன்போது, முன்னெடுக்கப்பட்டது. கலாசார நிகழ்வுகள், இலங்கையின் வரலாறு பற்றிய கதைகூறும் அமர்வுகள் மற்றும் கரையோர விளையாட்டுகள் போன்றன ஒன்றிணைந்திருக்கும் உணர்வை ஏற்படுத்தியிருந்தன.

இலங்கையின் சுற்றுலாத்துறை உறுதியான மீட்சியை பதிவு செய்த வண்ணமுள்ளதுடன், 2025 ஜனவரி மாதத்தில் மாத்திரம் 177,000க்கும் அதிகமான சர்வதேச சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தனர். இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 19% அதிகரிப்பாகும். இந்த மீட்சி தொடர்பில் Sun Siyam பாசிகுடா பெருமை கொள்வதுடன், அதில் பங்களிப்பு வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றது. பயணிகளுக்கு ஒப்பற்ற சொகுசு, கலாசார பெறுமதி மற்றும் மனம்மறவாத அனுபவங்களை இலங்கையின் மாசற்ற கிழக்கு கரையோரப் பகுதியில் வழங்குகின்றது.

34 அதிக இடவசதிகளைக் கொண்ட ஒன்று முதல் இரண்டு படுக்கையறைகள், பூந்தோட்டம் மற்றும் கடற்கரையை முகப்பாகக் கொண்ட பெவிலியன்களைக் கொண்டு அமைந்துள்ளன. உள்நாட்டு கலாசாரத்துடன் இணைவது அல்லது பாசிக்குடாவின் கரையோரத்தில் படகுகளில் சவாரி செய்வது, நட்சத்திரங்களின் கீழ் பிரத்தியேகமான இராப்போசணத்தை அருந்தி மகிழ்வது போன்ற பல சிறந்த அனுபவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.பிரத்தியேக கரையோர திருமண வைபவங்கள், கூட்டாண்மை சந்திப்புகள் மற்றும் தனிப்பட்ட கொண்டாட்டங்கள் போன்றவற்றுக்கு சிறந்த பகுதியாக இந்த ரிசோர்ட் அமைந்துள்ளதுடன், விருந்தினர்களுக்கு ஒப்பற்ற சிறந்த அனுபவங்களைப் பெற்றுக்கொடுக்கின்றது.

மெருகேற்றல் பணிகளைத் தொடர்ந்து Sun Siyam பாசிகுடா, 2023 நவம்பர் 17ஆம் திகதி மீளத் திறக்கப்பட்டது. Studio Sixty7 உடன் இணைந்து அலங்காரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த ரிசோர்ட் சிறந்த உள்ளக காட்சியமைப்புகள், வர்ண அமைப்புகளையும் கொண்டுள்ளது.



# இனியதோர் பயணம்...

இறுதி மூச்சினில் இனியதோர் பயணம்
இரவுபகலதாய் இரைமீட்ட கனவுகள்
இரத்த உறவுகள் இழந்த இணைப்புகள்
இறைவன் உதவினான் இலங்கை பறந்தனன்

நாடுகள் கடந்து நம் நாட்டை அடைந்திட
நாடிய ஊர்தியில் நம்முடை பாவனை
நற்சுவை உணவுடன் நற்குடி மக்களும்
நன்கே உறிஞ்சினர் நாட்டு மதுவினை!

நடுநிசியதனினில் நாட்டுள் புகுந்ததில்
நல்லதே மாற்றங்கள் நல்ல
அறிமுகம் நவீன அமைப்புகள்
நீள்பெருஞ்சாலைகள் நாலாபக்கமும்
நடமாடும் கூட்டங்கள்

உறவுகள் உணர்வுகள் உண்மையின்
தரிசனம் உழைப்பே பெரிதென உயர்வாய்
நின்றனர் உரிமையாய்த் தேடியே
உபசரித்தூட்டிய உள்ளமே
இறைவனின் உறைவிடப் பாங்கது

ஊதிப்பெருக்கிடும் ஊடகங்களும்
உளறுவாயராய் ஊர்க்குருவிகளும்
உலகைக் குழப்பினும் ஊரில் அமைதியே
உழைப்பதும் உண்பதும் உயிரினாய் மதிக்கிறார்

நாட்டு நிலைமையில் நடுங்கிடும்
பொருள்விலை நாமே திகைக்கையில்
நல்லதோ கெட்டதோ நாட்களை ஓட்டிடும்
நாட்டு மக்களின் நற்சுடர்
ஒளியது நல்கிட வேண்டுவோம்

எங்கினும் சுதந்திரம் எவருளும் ஒற்றுமை
எதனிலும் பிரிவுகள் எதுவுமே
அற்றதாய் எம்திருநாட்டதன்
எதிர்காலம் ஒளிவிடும் என்னுளம்
கூறிடும் எதார்த்தமாய் நம்பினேன்!


**கலாநிதி**
**மு.ந.சிவச்செல்வன்**
**ஆக்லாந்து, நியூ சிலாந்து**



# இளமை நினைவுகள்...

எனது உடலின் உயிர்
ஆலிலையின் மேல்
உருளும் பனித்துளியாய்
பட்டும் படாமலும்--
ஒட்டிக்கிடக்கின்றது
இளமைக்கால நினைவுகள்..
மண்ணில் விழுந்த விதையாய்
விளைந்து கிடக்கின்றது
எத்தனை உள்ளக் கிளர்ச்சிகள்..
மனதில் ஊசலாடிப் போனது
காதலுக்காய் காத்திருந்து
கனவுகண்ட காலங்கள்
மரங்கொத்தியாய் மண்டையைக்
குடைகின்றது...
நிறைவேறாத எண்ணங்கள்
கலைந்துபோன நேரமெல்லாம்
மனதின் பதைபதைப்புக்கள்
சொல்ல நினைத்து...
இலவுகாத்த கிளியாக
நீட்சியாய் மனதின் தவிப்பு
நினைவாய் ஒட்டிக்கிடக்கிறது...

**சம்பூர்தாசன்**








# மனித சுயம்...

**காரையன் கதன்**



பாம்புச் சட்டையென
கழட்டி விடப்பட்ட
மரணத்தின் பிரதிகளை
ஒவ்வொன்றாக
பிரட்டிப் பார்க்கிறேன்.
கழவட்டி சுனையாகி
உடல் ஊரும் நிலையில்
மரவட்டை புழுவென
சுருள்வதை தவிர
வெறேது வழி இல்லை.
புற்றுக்களை தொலைத்த
நிலங்களில்அறணை தேடுதல்
அவசியமற்ற செலவு.
உச்சிக் கொட்டும்
சம்பிரதாயங்களைமாற்றியமைத்த
வாழ்வியலில்
பல்லிகளை
ஒதுக்கிய வாழ்வு
எந்த போரின் தத்துவம்.
அவால்த்தனங்களின் மொத்த
உருவமாக நிறையும்
தற்கால மனித சுயத்தை
அவ்வப்போது யாரோ ஒரு
மனிதன் கழட்டி வைக்கிறான்.
நேற்றைய நாளில்
வேலை வழிப் பாதையோரம்
ஒரு வாழைப்பழத்தை
இரண்டு மைனாக்கள்
பகிர்ந்து உண்டதை
நானும் காண நேர்ந்தது.



# ஒரு காதல் மனு



ஞா.திரிஷா

**காதல் என்னும் மகத்தான உணர்வை வார்த்தைகளால்வரைவிலக்கணப்படுத்துவது சற்று கடினமான ஒன்றுதான். காதலுக்கு முதலும் இல்லை முடிவும் இல்லை என்கின்றனர் கவிஞர்கள்.**

**நாம் பிறந்தது முதல் இறக்கும் வரை ஒவ்வொரு தருணத்திலும் காதலை உணர்ந்திருப்போம். ஒரு குழந்தை தன் தாயிடம் உணரும் முதல் விலை மதிப்பற்ற காதல், நடைபயில கற்றுத் தரும் அந்த தகப்பனின் காதல், முதல் நாள் பள்ளிக்குச் செல்லும் போது அழுகையுடன் அமர்ந்திருக்கையில் கட்டி அனைத்து கதை கூறும் ஆசானின் காதல், உறவிலும், உணர்விலும், உடலிலும் கலந்து ஒட்டி இருக்கும் நட்பின் காதல், சேர்ந்திருக்கும் நேரத்தில் மனதை இழகுப்படுத்தும் செல்ல பிராணிகளின் காதல், என ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் ஒரு வகை காதலைச் சுவைத்துக்கொண்டு தான் வருகின்றான்**

இவ்வகையான எத்தனையோ காதல் இருந்தாலும் அனைவராலும் அதிகம் பேசப்படும், மதிக்கப்படும் காதல்தான் பருவ வயதை எய்திய ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தோன்றிடும் உன்னதமான உணர்வு! இதுவே எல்லோரிடமும் காதலாக புழங்கி வருகின்றது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள காதல் என்பது தாகமும் குடிநீரும் போல, ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை. இந்த யுகத்தில் நாம் கற்காமலேயே நம்மில் தோன்றும் அபூர்வமான ஒரு விஷயம்தான் காதல். அந்த உணர்வுக்கு மயங்காதவர் எவருமிலர். அதனை விரும்பாதவர் யாரும் இல்லை. அன்பு பாசம் போன்றவைகளுடன் பிணைந்து நிற்பதுவே காதல், அந்த காலத்துக் காதல் இந்த காலத்துக் காதல் என பிரித்துப் பார்க்க நான் விரும்பவில்லை. எந்த காலத்தின் காதலாக இரந்தாலும் காதல் உண்மையானதாக உள்ளதா என்பதே முக்கியம். இருந்தாலும் 2023இல் நாம் வாழ்வதால் உணர்வுடன் கருத்துக்களைப் பகிர்வதால் இந்த காலத்துக் காதலைப் பற்றியே கூற விரும்புகின்றேன்.

இந்த காலத்தில் பள்ளிப் பருவம் தொடங்கி தொழிலுக்குச் செல்லும் பாதை வரை காதல் மாயப்பட்டுத் தான் இருக்கின்றது. ஆண் பெண் இருவரிடமும் ஏற்படும் பாலியல் ஈர்ப்பு, அன்பு, அக்கறை, சேர்ந்து வாழ வேண்டும் என்பனவற்றை அடைவதற்கான ஓர் ஆசையினால் காதல் மலர்கின்றது.

தற்காலத்தில் அழகிற்கும் அதிக முக்கியத்துவம் காதல் கொடுத்து வருகின்றது. தினம் தினம் பலரை நம் வாழ்வில் கடந்து செல்கின்றோம் அவர்களில் அழகாக இருப்போர் அனைவரும், எம்மை ஒரு கனம் திரும்பிப் பார்க்க வைப்பார்கள். இதற்காகவே ஆண்களும் பெண்களும் பல முயற்சிகளை எடுப்பதோடு அதிக கவனம் செலுத்துகின்றனர். அதற்காகப் பணத்தையும் செலவிடுகின்றனர்.

நான் ஏன் இந்தப் பெண்ணை அல்லது ஆணை காதலிக்கின்றேன் என தனக்குள்ளே கேள்வி கேட்டால், மனசாட்சி சொல்லும் பதில் அவள் அல்லது அவன் அழகாக இருக்கிறான் என்பதுதான் பதிலாக இருக்கும். ஆனால், அதை ஒப்புக் கொள்பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.

பெண் ஒருத்தி காதலிப்பவனின் அழகின் உன்னத்தை எதிர்பார்ப்பதும் இரசிப்பதும் அதிகம். ஆனால், அந்த அழகை இழக்கும் வண்ணம் ஆண்கள் குடிப்பதனால் குறுகிய காலத்தில் தொந்தி விழுந்து, முகம் வீங்கி அவலட்சணமான தோற்றத்திற்கு மாற்றமடைவதுடன், தன் வயதை விட முதிர்ந்த தோற்றம் உடையவனாக மாறுகின்றான். இதனால் காதலியின் மனநிலை எவ்வாறு மாறும் அவள் வாழ்க்கை நிலை எவ்வாறு மாறும், பியர் குடித்து தன் வயதான தோற்றத்திற்கு மாறி இருக்கும் காதலனை உறவினர்களுக்கும் நண்பர் கூட்டத்திற்கும் அறிமுகப்படுத்துவதற்கும் சற்று தயக்கம் கொள்வாள், அவனுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டாலும் அதை அனைவரையும் போல் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு பலரின் விருப்புகளையும், கருத்துக்களையும்; அறிந்து கொள்ள ஆசைப் பட்டாலும் காதலனின் தோற்றத்தால் ஆசை நிராகரிக்கப்படுகின்றது. குடிக்கும் காதலன் கட்டி அணைத்து முத்தம் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் முத்தத்தின் சுவையையும் இன்பத்தையும் அனுபவிக்கத் தடையாக நாற்றம் காதலியின் குடலை குமட்டி எடுக்கும் அத்தருணம் அவளுக்கு நரகமாய் மனதிற்குள் தோன்றி செல்லும். குடிப்பதற்காக ஏமாந்து இருப்பவன் வாழ்க்கையில் எல்லா விடயங்களுக்கும் ஏமாந்துவிடும் ஒரு கோமாளியாக அவளின் எண்ணங்களில் ஆழமாகப் பதியும், காதலின் உச்ச மகிழ்ச்சி திருமணத்தின் பின் இல்லற வாழ்வில் ஆண் பெண்ணுக்கும் தரும் இன்ப உணர்வை இருவரும் அனுபவிப்பதாகும்.

அந்நேரத்தில், குடிக்கும் ஆணின் எண்ணங்களில் தொடர்பான சிந்தனைகளே அதிகம் ஓடிக்கொண்டு இருக்கும். இதனால் பெண்ணின் இன்பம் கானல் நீராய் களைந்து விடுகின்றது. இவ்வாறான இன்பங்கள் பெண்ணுக்கு மறுக்கப்பட்டாலும் காதலனுடன் சேர்ந்து சிரிக்கும் பழகும் நேரத்தைப் பொன்னான நேரங்களாக வாங்கிக்கொள்வாள். ஆனால், குடித்தால் தான் மகிழ்ச்சி என்று இருக்கும் காதலனுக்கு உண்மையான மகிழ்ச்சியையும் அன்பையும் ருசித்துப் பார்க்க முடியாத துரதிர்ஷ்டசாலிகளாக இருக்கின்றார்கள். இவ்வாறான காரணங்களினால் பெண்ணின் மனம் உடைக்கப்பட்டு அவளின் எதிர்பார்ப்புகளுக்குத் தகுந்தவனை தேர்ந்தேடுக்கின்றாள். இதனால் காதலும் சற்று கசந்து தான் போகின்றது.

புனித காதலைப் பெற்றும் வண்ணமாக வேலன்டைன் நாள் உலகம் முழுவதிலுமுள்ள மிக நெருங்கிப் பழகும் மக்கள் பலராலும் பெப்ரவரி 14 அன்று கொண்டாடப்படும் ஒரு கொண்டாட்ட நாளாக இருக்கின்றது. இந்நாளில் காதலர்கள் தங்கள் காதலைத் தெரிவித்துக் கொள்கின்றனர். வாழ்த்து அட்டைகள், இனிப்புகள், மலர்கள் ஆகியவற்றை இந்நாளில் காதலர்கள் பரிமாறிக்கொள்கின்றார்கள். இக் கொண்டாட்டம் பெப்ரவரி 7இல் இருந்து ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொரு தினங்களாகக் கொண்டாடப்படுகின்றது.

இவ்வருட காதலர் தினத்தில் அனைவரும் காதல் இரத்து அற்ற உண்மையான காதலை ருசிக்க வேண்டும். அறிவை திறந்து ஏமாறாத ஆண்களைக் காதலிப்பதற்குக் காத்திருக்கும் பெண்களின் ஓர் காதல் மனு இது.







**காதலர் தினத்தில் அனைவரும் காதல் இரத்து அற்ற உண்மையான காதலை ருசிக்க வேண்டும். அறிவை திறந்து ஏமாறாத ஆண்களைக் காதலிப்பதற்குக் காத்திருக்கும் பெண்களின் ஓர் காதல் மனு இது**

இஸ்ரேல்

## காசா மீதான தாக்குதல்

# மீண்டும் தொடங்கும்?



பிணைக்கைதிகளை வரும் சனிக்கிழமைக்குள்(15), ஹமாஸ்கள் விடுவிக்காவிட்டால், காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் மீண்டும் தொடங்கும் என்று, இஸேரல் பிரதமர் பெஞ்சமின் நெனயாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து பெஞ்சமின் நெதன்யாகு தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, “ஹமாஸ்கள் இறுதியாகத் தோற்கடிக்கப்படும் வரை, இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தும்” என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இஸ்ரேலிலின் அத்துமீறல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் அளவுக்கு போய் விட்டது என்று குற்றம்சாட்டியுள்ள ஹமாஸ், இது இஸ்ரேலிய பிணைக்கைதிகளின் விடுதலையைத் தடுக்கும் என்று தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஹமாஸ்களின் ஆயுதப் பிரிவு செய்தித் தொடர்பாளர் அபு ஒபெய்டா கூறுகையில், “இஸ்ரேலின் போர் நிறுத்த ஒப்பந்த மீறல்களை கண்காணித்து வருகிறோம். ஹமாஸ்கள் அனைத்து விஷயங்களையும் நிறைவேற்றியுள்ளது” என்று தெரிவித்துள்ளார்.



## இன்று இரண்டாவது போட்டி

# இலங்கையை வெல்லுமா அவுஸ்திரேலியா?

இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது கொழும்பில் வெள்ளிக்கிழமை (14) காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.


இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை வென்ற நிலையில், தொடரைச் சமப்படுத்துவதற்கு இப்போட்டியில் கட்டாயம் வென்றாக வேண்டிய நிலையில் அவுஸ்திரேலியா உள்ளது.

கடந்த போட்டியில் விளையாடிய அடம் ஸாம்பா, ஸ்பென்ஸர் ஜோன்சன், கூப்பர் கொனோலி, ஜேக் பிறேஸர்-மக்குர்க், அலெக்ஸ் காரியை, தன்வீர் சங்கா, பென் டுவார்ஷுஸ், கிளென் மக்ஸ்வெல், ட்ரெவிஸ் ஹெட், ஜொஷ் இங்லிஸ் ஆகியோர் பிரதியிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையணியில் அவிஷ்க பெர்ணாண்டோவுக்குப் பதிலாக நிஷான் மதுஷ்க அல்லது நுவனிடு பெர்ணாண்டோ விளையாடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஆடுகளமானது வறட்சியாகவே காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் 250 ஓட்டங்கள் வெற்றியை வழங்கக்கூடியதாக இருக்குமென நம்பப்படுகின்றது.

தாய்வான்

# சிலிண்டர் வெடித்ததில் நால்வர் பலி



தாய்வானில், வியாழக்கிழமை (13) காலை, பல்பொருள் அங்காடியில் ஏற்பட்ட சிலிண்டர் வெடிப்பு சம்பவத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

தாய்வான் - தைசங் நகரில், ஷின் கோங் மித்சுகோஷி என்ற பெயரிலான பல்பொருள் அங்காடி ஒன்று 12ஆவது தளத்தில் இயங்கி வருகிறது. இதில், உணவு விற்பனை செய்யும் பகுதியில் திடீரென இன்று காலை எரிவாயு சிலிண்டர் வெடித்ததில், கட்டிடத்தின் வெளிப்புற பகுதிகள் சேதமடைந்தன.

இந்த சம்பவத்தில் 4 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 8 பேர் காயமடைந்தனர். உயிரிழந்தவர்களில் 2 பேர் சீனா நாட்டை சேர்ந்தவர்கள் ஆவர்.

ஒரு குடும்பத்திலுள்ள 7 பேர் சுற்றுலாவுக்காக வந்த இடத்தில் இவர்கள் உயிரிழந்துள்ளனர்.



பங்களாதேஷ்

# ஆட்சி மாறியிருந்தாலும் நிர்வாகத்தில் மாற்றமில்லை

பங்களாதேஷில் ஆட்சி மாறியிருந்தாலும் நிர்வாக அமைப்பில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்று, ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பங்களாதேஷில், கடந்த ஒகஸ்ட் மாதம், மாணவர்களின் போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டது. இதையடுத்து, அந்நாட்டின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் அடைக்கலம் புகுந்தார்.

இதற்கிடையே, மாணவர்கள் நடத்திய போராட்டங்களின்போது நிகழ்ந்த வெவ்வேறு வன்முறைச் சம்பவங்களில், அதிலும் குறிப்பாக ஜூலை 15 முதல் ஒகஸ்ட் 5 வரையிலான மூன்றே வாரங்களில் மட்டும், உயிரிழந்தோர் எண்ணிக்கை சுமார் 1,400ஐ தாண்டியுள்ளது என்று, ஐ. நா. மனித உரிமைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது. .

அந்நாட்டின் பாதுகாப்புப் படைகள் மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டதாகவும், போராட்டக்காரர்களைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றதாகவும் ஐ. நா. தரப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, போராட்டங்களின்போது மனித உரிமை மீறல் குற்றங்கள் அதிகளவில் நடந்ததாகவும், இது குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் ஐ. நா. கூறியுள்ளது.



# இங்கிலாந்தை வெள்ளையடித்த இந்தியா

ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் இங்கிலாந்தை இந்தியா வெள்ளையடித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, அஹமதாபாத்தில் புதன்கிழமை (12) நடைபெற்ற மூன்றாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என்ற ரீதியில் இங்கிலாந்தை வெள்ளையடித்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இந்தியா: 356/10 (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 112 (102), ஷ்ரேயாஸ் ஐயர் 78 (64), விராட் கோலி 52 (55), லோகேஷ் ராகுல் 40 (29) ஓட்டங்கள். பந்துவீச்சு: அடில் ரஷீட் 4/64, மார்க் வூட் 2/45, சஹிப் மஹ்மூட் 1/68)

இங்கிலாந்து: 214/10 (துடுப்பாட்டம்: குஸ் அட்கின்ஸன் 38 (19), டொம் பன்டன் 38 (41), பென் டக்கெட் 34 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: அக்ஸர் பட்டேல் 2/22, ஹர்ஷித் ரானா 2/31, அர்ஷ்டீப் சிங் 2/33, குல்தீப் யாதவ் 1/38)

போட்டியின் நாயகன்: ஷுப்மன் கில்

தொடரின் நாயகன்: ஷுப்மன் கில்.



## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் லிவர்பூல் - எவெர்ற்றன் போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், எவெர்ற்றனின் மைதானத்தில் வியாழக்கிழமை (13) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் சமப்படுத்தியது.

லிவர்பூல் சார்பாக அலெக்ஸிஸ் மக் அலிஸ்டர், மொஹமட் சாலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். எவெர்ற்றன் சார்பாக பெட்டோ, ஜேம்ஸ் டர்கொவ்ஸ்கி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 57 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 50 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 47 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நொட்டிங்ஹாம் பொரெஸ்டும், 43 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் செல்சி காணப்படுகின்றது.

உத்தர பிரதேசம்

# திருமண–விருந்தை குழப்பிய சிறுத்தை



உத்தரப் பிரதேசத்தில், திருமண விருந்து நிகழ்ச்சியில் திடீரென சிறுத்தையொன்று நுழைந்த வீடியோ ஒன்று வைரலாகி வருகிறது.

உத்தரப் பிரதேசத்தின் தலைநகர் லக்னோவில் உள்ள புத்தேஷ்வர் சாலை பகுதியில், புதன்கிழமை (12) இரவு, திருமண விருந்து நிகழ்ச்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது. விருந்தினர்கள் பலர் சாப்பிடுவதற்காக அந்த அறையில் கூடியிருந்த போது, சிறுத்தை ஒன்று திடீரென உள்ளே நுழைந்தது. இதனைப் பார்த்த விருந்தினர்கள் அனைவரும் அலறியடித்தபடி தப்பியோடியுள்ளனர். இந்த தகவல் அறிந்த மணமக்களும் பயத்தில், திருமண அரங்கிலிருந்து ஓடிச்சென்று காருக்குள் புகுந்து கொண்டனர். இந்த விடயம் அறிந்து பொலிஸார், வனத்துறை அதிகாரிகள் உடனடியாக சம்பவ பகுதிக்குச் சென்றனர். பல மணிநேரம் போராடி சிறுத்தையை அவர்கள் பிடித்துள்ளனர். சிறுத்தையைப் பிடிக்கும் வரை, மணமக்களின் குடும்பத்தினரும் பாதுகாப்பிற்காக அவரவர்களுடைய வாகனங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.




புதுடெல்லி

# காங்கிரஸ் எம்.பிக்கள் போராட்டம்

கேரள கடலோர மற்றும் வனப்பகுதிகளைச் சுற்றியுள்ள சமூகங்களைப் பாதுகாக்கக் கோரி, பாராளுமன்ற வளாகத்தில், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் எம்.பிக்கள், நேற்று (13) போராட்டம் நடத்தியுள்ளனர்.

இதுகுறித்து வயநாடு எம்.பி. பிரியங்கா காந்தி ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில், ‘வயநாட்டில் வனவிலங்குகளால் இதுவரை 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இது மிகவும் கவலைக்குரிய ஒரு சூழ்நிலை . இந்த பிரச்சினையைச் சரிசெய்ய மத்திய அரசும் மாநில அரசும் வயநாடு தொகுதிக்கு நிதி வழங்க வேண்டும். இந்த பிரச்சினையை மக்களவையில் இன்று எழுப்புவேன் என்று நம்புகிறேன்’ என்று தெரிவித்துள்ளார்.



## முத்தரப்புத் தொடர்:

# இறுதிப் போட்டியில் பாகிஸ்தான்

நியூசிலாந்து, தென்னாபிரிக்கா பங்கேற்ற முத்த்தரப்பு ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் தகுதி பெற்றுள்ளது.

கராச்சியில் புதன்கிழமை(12) நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இறுதிப் போட்டிக்கு பாகிஸ்தான் தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, ஹென்றிச் கிளாசென்னின் 87 (56), மத்தியூ பிறெட்ஸ்கேயின் 83 (84), அணித்தலைவர் தெம்பா பவுமாவின் 82 (96), கைல் வெரைனின் ஆட்டமிழக்காத 44 (32) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 352 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஷகீன் ஷா அஃப்ரிடி 2, குஷ்டில் ஷா மற்றும் நசீம் ஷா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 353 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், சல்மான் அக்ஹாவின் 134 (103), அணித்தலைவர் மொஹமட் றிஸ்வானின் ஆட்டமிழக்காத 122 (128), பக்கர் ஸமனின் 41 (28) ஓட்டங்களோடு 49 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக அக்ஹா தெரிவானார். இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் நியூசிலாந்தை பாகிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 14, பெப்ரவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.